307

உ

கடவுள்துணை.

ஸ்ரீகாந்தபுராணத்துள் ஓர்பிரிவாகிய

# ஜலந்திராசுர
## சம்மார நாடகம்.

இஃது கூடலூர் ஓ. டி.
ம. தி. முருகேசமுதலியார்
கேட்டுக்கொண்டபடி,
ஷை யூர் ஸ்ரீமான். சிவனேச
துரைசாமிசெட்டியார் அவர்கள்
மாணாக்கரிலொருவரும்
ஷை யூர், ஹெட்,
பாவாடைபடையாச்சியாரின் குமாரருமான
வீராசாமிபடையாட்சியாரால்
இயற்றப்பட்டு,

ம. தி. இரத்தினமுதலியார்
அண்டுபிரதர் அவர்களால்
சென்னை:
கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.
1928.

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட் [ அணு 5.

15 APR 19
O-, 2MVP, J
N28.
68666

உ

கடவுள் துணை.

ஸ்ரீகாந்தபுராணத்துள் ஓர்பிரிவாகிய

# ஜலந்திராசுர

## சம்மார நாடகம்.

இஃது கூடலூர் ஒ. டி.

ம. தி. முருகேசமுதலியார்

கேட்டுக்கொண்டபடி.

ஷை யூர் ஸ்ரீமான். சிவனேச

துரைசாமிசெட்டியார் அவர்கள்

மாணாக்கரிலொருவரும்

ஷை யூர். ஹேட்.

பாவாடைபடையாச்சியாரின் குமாரருமான

வீராசாமிபடையாட்சியாரால்

இயற்றப்பட்டு.

ம. தி. இரத்தினமுதலியார்

அண்டுபிரதர் அவர்களால்

சென்னை:

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கபபட்டது.

1928.

இதன்விலை ] ரிஜிஸ்டர்ட் காப்பிரைட் [ அணா 5.

உ

கடவுள் துணை.

கொஞ்சிகுப்பம் துரைசாமிசம்மஷ்டியார் பிரதமமாணாக்கர்

தெய்வநாயககண்டர் அவர்களாலியற்றிய

# சாற்றுக்கவி.

சீரோங்குமுமையவளும் மிடப்பாகத்தில்
தினமோங்குந்திருச்சடையில் மதியுங்கங்கை
காரோங்கும்பொழில்வளஞ்சூழ் கழனியோங்கும்
கதிர்விளையுஞ்சென்னெல் வளர்கூடலூரில்
பேரோங்கும்பாவாடை யேட்டவர்கள்
பெருந்தபத்தையடைய வருள்வீராசாமி
நேரோங்குஞ்ஜலந்திரனார் சரிதைதன்னை
நீணிலத்தில்நாடகமாய் நிகழ்த்தினாரே.

68666

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் கூடலூர்.ஹெட் பாவாடைபடையாட்சி குமாரன்வீராசாமிபடையாட்சியாரிடம் ஜலந்திராசூரசம்மார நாடகத்தை ஷெ யூர். ம. தி. முருகேச முதலியார் கிரயம்பெற்று அச்சிட்டு ரிஜிஸ்டர்காப்பிரைட் செய்து இருக்கிறபடியால் ஷெ யார் அனுமதியின்றி இனி யாவரேனும் பேர்மாத்தியாவது முன்பின்சங்கதிகளை புரட்டியாவது அச்சிடுவாராயின் **1867** வது ஷு **25**-வது, ஆக்டின் **20**-வது, பிரிவின் **6**-வது விதியின்படி நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகியும் பினல்கோர்ட்டாரவர்கள் சட்டத்திற்கு விரோதஸ்தர்களுமாவார்கள் என்று அறிக.

இப்படிக்கு,

**ம. தி. முருகேசமுதலியார்.**

ஓல்டவுன், கூடலூர்.

உ

கடவுள் துணை,

ஸ்ரீகாந்தபுராணத்துள் ஓர்பிரிவாகிய

# ஜலந்திராசூரசம்மார நாடகம்.

## விநாயகர்-சுப்பிரமணியர்-சரஸ்வதி-சிவன்-விஷ்ணு பிர்மா துதி.

சீர்புகழும் ஸ்காந்தமுதல் பிரபந்தத்தில்
செப்புகின்ற ஜலந்திரன்றன் சரிதைதன்னை
பார்புகழுஞ் செந்தமிழ் நாடகமாய்கூர
பாங்குடனே கயிலைதனில் வீற்றிருக்கும்
தார்புகழுந் தற்பறரின் செல்வரான
தந்திமுகன் கலைவாணி தணிகைவேலன்
பேர்புகழு மறனயன்மால் பாதந்தன்னை
பிரியமுடன் யான்பணிந்து பேசுவேனே.

### தேவேந்திரன்வருவது-கவி.

பச்சையுடன்வச்சிரமு மிழைத்தநல்ல
பாங்குடையமவுலியது பளபளென்ன
கச்சணியுமடவார்க ளிருபாற்சூழ
கறந்தனிலேவச்சி ராயுதமிலங்க
உச்சிதமாய்மேனகையும் ரம்பையோடு
ஊர்வசியுந்திலோர்த்தமையும் நடனஞ்செய்ய
விசித்திரவெண்கரியின் மீதிலேறி
விமலனெனஇந்திரனும் வருகின்றேனே.

### தேவேந்திரன்-தரு.

ஜெகம்புகழுங்காசிபர்
செல்வன்தேவேந்திரன்வந்தேன்
செல்வன்தேவேந்திரன்
அகமகிழ்ந்துஅமரர்
சுரு-அந்திரரம்பையர்
சுந்திரமுதர்கள்

மிகமகிழ்ந்துஅளித்த
வெண்கரியதிலேறி
வந்தேன்
அருகில்பணிந்துநிற்க
வந்தெதிராடிட
சோபனம்பாடிட (ஜெகம்)

வாகுவல்லயமின்ன வச்சிராயுதமுந்துன்ன
நாகரீகமாகவே நவரத்னமுடிமின்ன
சுரு-நற்றவமுனிவர்கள் மெத்தவேசூழ
வுற்றதோர்மந்திரிகள் பத்தியாய்தாழ (ஜெகம்)

அமராபதித்தலைவன் அகிலமெங்கும்பிரதாபன்
இமையவர்தமக்கெல்லாம் இறைவனாகியபூபன்
சுரு-இந்திரவானவ ரெந்தனைப்போற்ற
சந்திரசூரியர் சிந்தையிலேற்ற (ஜெகம்)

அண்டநடுங்கிடவே அதிரமுரசுபேரி
கண்டோரொடுங்கிடவே காளசின்னமும்பூரி
சுரு-காசினியுள்ளவர் கண்டுமேமகிழ
மாசிலாதகபத் தோர்களும்புகழ (ஜெகம்)

அசுரர்களையடக்கி அதிகசெருக்குக்கொண்டேன்
திசையெங்குமெந்தன்கீர்த்தி தெரியஅரையவிண்டேன்
சுரு-தீரசூறர்கள் நின்றுவாடிட
வீரர்யாவருங் கண்டுவோடிட (ஜெகம்)

கற்பகத்தருவுடன் காமதேனுயிருக்க
ஒப்பில்லாசிந்தாமணி அர்ப்புதமும்பெருக்க
சுரு-ஓதியவேத நாதமுமிஞ்ச
வாதையில்லாமலே வஞ்சியர்கொஞ்ச (ஜெகம்

தேவேந்திரன்-கவி.

அந்தமுநடுவுமின்றி ஆதியுமில்லாமல்தான்
விந்தையாய்கயிலைவாழும் விமலனார்ப்பாதந்தன்னில்
நந்தியாவட்டமோடு நறுமணமலர்கள்சாற்றி
சந்ததம்பணிந்துயானுஞ் சம்பிரமாய்க்கொலுவதானேன்.

தேவேந்திரன்-வசனம்.

ஆனால் கேளுமப்பா மந்திரி இளமை வாலிபம் விருத்தாப்பிய மில்லாமல் பராபரவஸ்துவாக இருக்கும் சாட்சாத் பரமசிவத்தின் பாதத்திற்கு அடியேன் பன்னீர்கொண்டு பாதந்துலக்கி அனேகவித மலரா லர்ச்சித்து அனேக கோடிவந்தனம் சபா.

தேவேந்திரன்-கவி.

சதுர்விதவுபாயங்கற்ற தளபதிசொல்லக்கேளாய்
அதிபெலஅரக்கர்தம்மை அடங்கலுஞ்ஜெயமடைந்து
நிதிபெருமுலகுக்கெல்லாம் நிகரில்லாஅரசனானேன்
பதிபுகழ்தேவிதன்னை பாங்குடன்வரச்செய்வாயே.

தேவேந்திரன்-வசனம்.

சாமபேத தானதண்டமென்லும் நான்குவித உபாயமும் அறிந்த மந்திரிமார்களே நாம்திரிலோகங்களையும் அதாகதம்செய்த ராட்சதாளை எல்லாம் ஜெயமடைந்து நாமே ஏகசக்ரேஸ்பரனாய் இந்தஅமராபதியை அரசுபுரிவதால் இனி நமக்குயாரும் எதிரில்லாத படியாலும் நான் கயிலாயம் சென்று பரமசிவத்தை தெரிசித்து வரவேண்டுமாகையால் என் தேவியாகிய இந்திராணியை அழைத்துவரும்படி கட்டளை யிடுங்கோள் மந்திரிமார்களே.

இந்திராணிவருவது-கவி.

அதிரூபஒயில்சிங்காரி அரிவையரிருபால்சூழ
கதிரொளிபணியிலங்க கன்னியர்கவரிவீச
மதிமுகந்துலங்கவே தான் மன்னவனிந்திரன்பக்கல்
பதிபுகழிந்திராணிமாது பாங்குடன்வருகின்றளே.

இந்திராணி-தரு.

திங்கள்வதனரூபி எங்கும்புகழ்ப்பிரதாபி
தேவிஇந்திராணிவந்தாள் அதிஒயிலாய்
தேவிஇந்திராணி வாராள்
செங்கைகடகமின்ன சிறந்தவொட்டியாணந்துன்ன
சுரு-சித்திடைமாதுமே மெத்தமகிழ்ந்து
வுத்தமநாதனை நத்திபுகழ்ந்து (திங்கள்)

கதிரொளியைபோலவே கழுத்திலாரந்துலங்க
பதியெல்லாம்புகழ்பெற்ற பாதசரமிலங்க
சுரு-பச்சைக்கிளிமொழி வார்த்தைகளோட்டி
வுச்சிதமாய்விழி மையதுதீட்டி (திங்கள்)

ஜாதிமல்லிகைமுல்லை சந்தணக்களபம்பூசி
தாதிமாருடன்கூடி சந்தோஷமாகபேசி
சுரு-தர்ப்பரன்தன்னிரு தாளிணைப்போற்றி
அர்ப்புதமயிலென அரிவையுஞ்சாற்றி (திங்கள்)

மண்டலம்புகழ்ந்திடும் மன்னன்மைத்தசேதி
கண்டுவருவோமென்று கன்னிமிகவேவோதி
சுரு-கவலையில்லாமலே காரிழைமாது
புவனமதித்திடும் பொற்கொடிசாது (திங்கள்)



### இந்திராணி-தரு.

ஏதேந்தன்மீதுந்தன் என்றவர்னமெட்டு.

வந்தனந்தந்தேனே வுந்தன்பாதந்தானே
சிந்தைமகிழ்ந்துமே இந்திராணிநானே
கந்தமலர்வில்வங்கொண்டு சந்தோஷமாய்பணிந்தேனின்று
கன்னியாளென்னை யழைத்ததுஏது
பன்னுமரியஎன் முன்னேஇப்போது
வுன்னிதமான என்மன்னுநீவோது
சென்னிவணங்கினேன் நண்ணியமாது

### இந்திராணி-வசனம்.

சருணம்சருணம் பிராணபதி தங்கள் பாதாரவிந்த கமலங்களுக்கு அடியேன் தீர்க்க நமஸ்காரம் செய்தேன் தாங்கள் இந்தக் கொலுமுகம் நாடி வரவழைத்த காரணம் இன்னதென்று திருவுளம்பற்ற வேண்டுமையா சுவாமி.

### தேவேந்திரன்-கவி.

கொஞ்சிடுங்கிளியைப்போன்ற கோதையேஎனதுபிராண
வஞ்சியேநீநீடூழி வாழிமென்மேலும்வாழி
நஞ்சுண்டபரமன்தன்னை நான்காணசெல்வதாலே
சஞ்சலமில்லாமல்நீ தையலேவிடையளிப்பாய்.

### தேவேந்திரன்-வசனம்.

கேளும் பெண்ணே பிராணநாயகி நீ நீடூழி காலம் கல்யாண குணத்தோடு வாழக்கடவது உன்னை அழைத்தகாரணம் யாதென்றால் நான் திரிலோகத்தையும் இம்சை படுத்திவந்த ராக்ஷதர்களை எல்லாம் ஜெயித்து நானே யேகசக்ரேஸ்பரனாய் அரசுபுரிவதால் இன்றையதினம் முக்கண்தாரியாகிய பரமசிவத்தைக் கண்டு சேவித்துவரவேண்டுமாகையால் எனக்கு உத்திரவு தந்தனுப்பும் பெண்ணே பிராணநாயகி.

### தேவேந்திரனுக்கும்-இந்திராணிக்கும்-தர்க்கம்-தரு.

கண்ணா-வண்ணா-மண்ணையளந்த-என்றவர்னமெட்டு.

நன்றாஇன்று சென்றுவர
நாதனே பிரைக்கியாதனே
என்றுந்தடுத்ததில்லை இளங்கொடிவுந்தனைநான்
நின்றுஇன்றயதினம் நேசரேசெல்வீர்நாளை தான்

### தேவேந்திரன்-தரு.

மாதேஉதுஒதிநீதான் மடக்குராளனை
யடக்குராய் மாதே
தீதுவருமென்றெனக்கு தெரிவையேநினைந்திடாதே
சாதுவாகஎனக்குவிடை தையலேகொடுயிப்போதே

### இந்திராணி-தரு.

மன்னாஎன்ன சொன்னாயிப்போ
மார்க்கமோபோக ஏர்க்குமோ
கன்னிவசனந்தள்ளி கட்டழகாசென்றீரானால்
பின்னமுனக்குவரும் பேதைசொல்மீறிப்போனால்

### தேவேந்திரன்-தரு.

தீரவீரசூறரை யடித்தோட்டினேன்
கெடிநாட் டினேன்
ஆருமெந்தனுக்கிணை அவனியிலுண்டோசொல்லு
கூறும்பதிலெனக்கு கோதையேஅப்புறஞ்செல்லு

### இந்திராணி-கவி.

மதிபெருமெனதுபிராண மன்னவாசொல்லக்கேளும்
பதிபுகழ்கயிலைநாடி பாங்குடனின்றுசென்றால்
சதிவருஞ்சொன்னேன்நாளை சம்பிரமாய்ச்செல்லலாகும்
துதிபெருமுனதுபாதந் தோகையாள்பணிந்திட்டேனே.

இந்திராணி-வசனம்.

சரணம் சரணம் பிராணநாயகா தேவரீர் இன்றையதினம்கயிலாச பதியாகிய பரமசிவத்தை காணும்படிசென்று வருகிறேனென்று சொல் லுகிறபடியால் அடியாளுக்கு ஏதோ மனக்கிலேசமாக இருக்கிறது ஆகையால் இன்றயதினம் தங்கியிருந்து நாளேக்கி செல்லுவீர் பிராண நாயகா.

தேவேந்திரன்-கர்தார்த்தம்.

சண்டாளிபட்டிமுண்டை உனைப்போலிந்த
சாகரத்தில்நானெங்குங் கண்டதில்லே
உண்டானமட்டுநீ பேசவந்தாய்
ஒருபோதுமுன்வார்த்தைக் கேழ்க்கமாட்டேன்
கண்டாயோ எனக்குயிடர் வருகுமென்று
காரிழையேஎன்னெதிரில் நின்றுகூற
கொண்டாயோ அதிககெர்வம் நீதானிப்போ,

தரு.

| | |
|---|---|
| கோதையேபோடி | எதிரில்லாமல் |
| பேதையே | போடி |
| வாதையடையவுன்னே | வாட்டினேன்பாரிப்போ |
| சேதமடையாமுன்னே | அரமனேசேரிப்போ (கோ) |

பொதுவசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் தன் தேவியாகிய இந்திராணியை அடித்து துரத்திவிட்டு தான் பரமசிவத்தை காணும்படி செல்வது காண்க.

தேவேந்திரன்-தரு.

| | |
|---|---|
| சித்திரக்குடைபிடிக்க | நத்தியேமாதர் நடிக்க |
| பத்தியாய்வெண்கரியேறியே | தேவேந்திரராஜன் |
| பாங்குடன் | கயிலேசாரியே |
| மங்களவாத்தியந்தட்ட | இங்கிதபேரிகைகொட்ட |
| தங்கமாமுடியணிந்துமே | தேவேந்திரராஜன் |
| தற்பரன் தன்னே | நினேந்துமே |
| கரிபரிரதமுஞ்சூழ | காவலாருகில்தாழ |
| பிரியமாய்கயிலாசந்தேடியே | தேவேந்திரராஜன் |
| பிஞ்சகனேக் | காணநாடியே |
| அரக்கரைஜெயமுங்கொண்ட | அமரர்கோனென்றுவிண்டே |
| சிரப்பானக்கயிலேகண்டேனே | தேவேந்திரராஜன் |
| சிந்தையிலானந்தங் | கொண்டேனே |

## பொதுவசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் கயிலாயம் நாடிவரும்போது அதை யறிந்த பரமசிவமானவர் தேவேந்திரனுடைய அகத்தை யடக்கவேண்டு மென்று அகோரரூபமாய் பூதவுருவங்கொண்டு சபாவாக வருலது.

## பூதம்வருவது-கவி.

மதிநதியுமுடிதனிலே அணிந்தநாதன்
 மங்கையர்க்குஇடதுபுர மளித்தநாதன்
சதியுடையசர்ப்பமதை யணிந்தநாதன்
 சராசரத்தையளித்தழிக்குஞ் சர்வபோதன்
பதிதனிலேஇந்திரனுங் கொண்டகெர்வம்
 பாங்குடனேதானடக்க பரமரப்போ
அதிவிரைவாய்ப்பூதவுரு வெடுத்துமேதான்
 ஆக்கரித்துகுதித்தோடி வருகின்றாரே.

## பூதம்வருவது-தரு-சிந்து.

| | |
|---|---|
| அப்புடனேமதியணியு | நாதன்-ஆகா |
| அங்கையர்கண்ணிக்கி | இடைதந்தவேதன் |
| செப்பரியசர்ப்பமதை | தரித்தோர்-எங்கும் |
| சிங்காரமானதொரு | அங்கஜனை எரித்தோர் |
| சண்டனைக்காலா | னுதைத்தோர்-பின்னும் |
| சதுர்முகன்சிரந்தனையே | சடுதியில்சிதைத்தோர் |
| அண்டசராசர | மளித்தோர்-நல்ல |
| அரிதனக்காழிதனை | அன்புடனளித்தோர் |
| இந்திரனுமனதிலே | நினைந்த-கெட்ட |
| எண்ணமதைப்போக்குவேநான் | என்றுமேமுனைந்தே |
| சந்திரசூரியரும் | வாட-இப்போ |
| சகலருமெந்தனையே | கண்டுபயந்தோட |
| ஆங்காரபூதவுரு | கொண்டேன்-இந்த |
| அவனியில்எந்தனுக்கிணை | யுண்டோவிண்டேன் |
| ஓங்காரங்கொண்டுமேநான் | சென்றேன்-இப்போ |
| உச்சிதமாய்கோபுரவாசல் | படிநின்றேன் (தத்தோ) |

## பூதம்-கவி.

அடிதனில்பணிந்துநிற்கும் அன்புள்ளகணமேகேளாய்
சடிதியிலமரர்கோமான் தயித்தியர்களைஜெயித்து
கெடியுடன்வருவதாலே அவன்கெர்வத்தையடக்கவேண்டும்
கடிகியோரன்னைவிட்டு கணநேரஞ்செல்லுவீரே,

பூதம்-வசனம்.

கேளும் சிவகணங்களா அமராபதி தலைவனாகிய இந்திரன் ராக்ஷதாளை யெல்லாம் ஜெயித்தோமென்னும் இருமாப்படைந்து தன்மனதில் கெர்வங்கொண்டு இப்போது நம்மைக் காணும்படி வருவதால் அவன்கெர்வத்தை யடக்கும்படியாய் நான் இந்த பூதவுருவமெடுத்து இந்தக் கோபுரவாசற்படியில் நிற்கிறேன் நீங்கள் சற்று மறைவாக நில்லுங்கள் சிவகணங்களா.

தேவேந்திரன்-கவி.

எரிவிழிஜொலிக்கவேதான் இருமாந்துளதிரில்நிற்கும்
வெரியுள்ளபூதாகேளாய் விமலரைக்காணவேண்டி
மரியாதையாகவந்தேன் மன்னவனிந்திரபூபன்
அரிவித்தேனுனக்குநானே அகலுவாய்வழியைவிட்டே.

தேவேந்திரன்-வசனம்.

அக்கினியைப் போன்ற விழிகளும் மூன்றாம்பிறையைப் போல் வளைந்த கோரதந்தங்களையும் பருத்த திரேகத்தையு முடைய பூதனே நான் பரமசிவத்தைக் காணும்படி செல்வதால் வழியைவிட்டு அப்புறஞ் செல்லும் பூதமே.

தேவேந்திர-மறுகந்தார்த்தம்.

பேசாமலிருப்பதென்ன பிணங்கினும்பூதமேநான்
ஆசாரமாகக்கேட்டும் அசையாமலெதிர்த்துநின்றாய்
தேசாதிதேசமெல்லாம் தெரியவேவுக்ரங்கொண்டு
வேசாரிமடியநீயும்,

தரு.

| | |
|---|---|
| விட்டேன்வச்சிராயுதத்தை | உந்தனைகொல்ல |
| தொட்டேன் | வச்சிராயுதத்தை |
| அஷ்டதிசைகளெல்லாம் | அதிர்ந்துநடுநடுங்க |
| கஷ்டமடைந்துநீயும் | காலன்பதிஒடுங்க (விட்டே) |

பூதம்-கந்தார்த்தம்.

விட்டிட்ட ஆயுதத்தை விமலருஞ்சாம்பலாக்கி
திட்டமாய்பூதரூபம் சீக்கிரம்போக்கியேநான்
சட்டமாய்மழுமானேடு சதிர்பெருஞ்சூலமேந்தி
அஷ்டதிக்குள்ளோர் போற்றும்.

## தரு.

அரனுகிஎதிர்கின்றனர் உக்ரமிகுத்து
அரனுகி எதிர்கின்றனர்
உரகாபரணம்பூண்டு உம்பர்கோன்தன்னெதிரே
சிரமாலையுங்தரித்து சித்தமிகவேகொண்டு (அரனு)

## தேவேந்திரன்-தேவாரம்.

சோமனைத்தரித்தாய்போற்றி சுந்தரேஸ்பரரேபோற்றி
காமனைஎரித்தாய்போற்றி கங்கைபங்காளாபோற்றி
ஏமனையுதைத்தாய்போற்றி யீசனேபாதம்போற்றி
பூமனைசிதைத்தாய்போற்றி உன்பொன்னடிபோற்றிபோற்றி



## தேவேந்திரன்-தரு.

கற்பரேவுனது தாளிணைக்கேசருணம்
தயவுவைத்தாளுமையா சிவசங்கரா
அற்பனடியேன்செய்த இப்பெரும்பிழைதன்னை
அருள்சுரந்தாளுமையா சிவசங்கரா
பங்கையன்சிரந்தன்னை செங்கரத்தால்சிதைத்த
பரமனேபாதுகாரும் சிவ்சங்கரா
திங்களுங்கெங்கையோடு பொங்கரவமணிந்த
தேவாஎந்தனைக்காரும் சிவசங்கரா

தேவேந்திரன்-வசனம்.

ஓம் அரகரா மகாதேவா சம்போசங்கரா காளகண்டா திருநேத்திரா உமாமயேஸ்பரா மான்மழு சூலகபாலியான ஜெகதீஸ்பரா நான் அரியாமல் செய்தகுற்றத்தைபொருத்து மன்னித்தருள வேண்டுமையா சுவாமி.

ஈஸ்பரன்-தேவேந்திரன்-தர்க்கம்-தரு

என்னையிகழ்ந்துமே இந்திரா-இப்போ
எதிர்த்துவாளி விட்டாய்சுந்திரா
வன்னியைப்போல்சிரி வருகுதேபெருங்கோபம்
உன்னைவிடுவதில்லை ஓகோபிடி சாபம்

தேவேந்திரன்-தரு.

முப்புரத்தைஎரித்து அப்போதெங்களைகார்த்த
முதல்வாஎன்பிழைபொரும் சிவசங்கரா
செப்புங்கல்யாணைக்கிரீர் செங்கரும்பளித்தாப்போல்
சிறுவனைக்கார்த்திடுவீர் சிவசங்கரா

ஈஸ்பரன்-தரு.

அண்டமதிறகோபம் வருகுதே-எந்தன்
அங்கமெல்லாம் வேர்வைபெருகுதே
துண்டத்தனமுள்ள சூரரைவதைத்ததால்
கொண்டாயோஅதிகெர்வம் தேவர்பெருத்ததால்

தேவேந்திரன்-கவி.

பாலன்மார்க்கண்டனுக்காய் பாரெலாமரியத்தானே
காலனையுதைத்தபாதக் கமலமேபோற்றிபோற்றி
சீலநான்செய்தகுற்றம் சிறுவன்மேல்கிருபைகூர்ந்து
ஆலகாலத்தையுண்ட அமலனேக்ஷமித்திடீரே.

தேவேந்திரன்-வசனம்.

பாலனாகிய மார்க்கண்டனுக்காக பரிந்து ஏமனை உதைத்து வீழ்த்திய காலகாலமூர்த்தி என்னும் கங்காதரக்கடவுளே (சிரியோர்செய்த சிருபிழையெல்லாம் பெரியோராயிர் பொருப்பதுகடனே) என்ற வாக்கியப்படி அடியேன் தெரியாமல் செய்தகுற்றத்தை மன்னித்து என்பேரில் கிருபாநோக்கம் பாலிக்க வேண்டுமையா சுவாமி.

ஈஸ்பரன்-கவி.

இந்திரனேயெனக்குதித்த சித்தந்தன்னை
எவராலுமடக்கிடவே முடிந்திடாது
சுந்திரனேகோபமொடு வெயர்வைதன்னை
திரட்டியேதென்கடலி லெரிந்தேனிப்போ
விந்தையுள்ளஜலந்திரனு யவனுந்தோன்றி
வெகுகாலமவனால் நீகஸ்தியுற்று
எந்தனிடவார்த்தைபடி யவனுமாள
யீய்ந்திட்டேன்வரமுனக்கு யேகுவாயே.

ஈஸ்பரன்-வசனம்.

கேளும் தேவேந்திரனே நீ என்னை இன்னாரென்று அறியாமல் கேவலமாய்பேசி என்பேரில் வச்சிராயுதத்தை விட்டபடியால் எனக்கு சித்தமாகிய கோபம் பிரவேசித்து நெற்றிக்கண்ணி லிருந்து வியர்வை நீரும் பெருகுவதால் இனி அதையாராலும் அடக்கமுடியாது ஆகை யால் நான் அந்தகோபத்தையும் வியர்வைநீரையும் திரட்டி ஒன்றாய்ச் சேர்த்து தென்சமுத்திரத்தில் எரிந்தேன் அதுசமுத்திரத்தில் ஓர் ஆண் குழந்தையாய் தோன்றி வருணபகவானால் வளர்க்கப்பட்டு பிர்மாவி னால் ஜலந்திரனென்று நாமம் சூட்டப்பட்டு எவ்வர்ன திசை யடைந்து பிருந்தாவதியை மணந்து பிறகு உங்களை இம்சைபடுத்தும்போது நான் உங்கள் அபயஸ்தத்துக் கிறங்கி அவனை சம்மாரஞ்செய்கிறேன் போய் வாரும் தேவேந்திரனே.

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக சாபத்தைப்பெற்ற தேவே ந்திரன் மனக்கிலேசமுற்று தெய்வலோகம்போய்ச் சேர அப்போது பரமசிவனானவர் தென்கடலிலெரிந்த வியர்வைநீரானது ஓர் ஆண்சந் தானமாய் தோன்றி வருணபகவானால் மகன்முறமையாய் வளர்க்கும் போது ஓர்நாள் அக்குழந்தை பசியினால் அழுதசத்தமானது சர்வலோ கமும் அதிரும்படி கேழ்க்க அதையறிந்த பிர்மதேவன் அக்குழந்தை யிருக்குமிடம்வந்து வருணனிடமிருந்த அக்குழந்தையை தன்கரத்தில் வாங்கினமாத்திரத்தில் அக்குழந்தை பிர்மாவின் நான்குதாடி மயிரை யும் கெட்டியாய்ப் பிடித்திழுத்து இம்சைசெய்ய அப்போது பிர்மாதாடி மயிரை மெதுவாக வாங்கிக்கொண்டு அக்குழந்தை சிவாம்சமாய் சலத் தில் பிறந்ததால் ஜலந்திரனென்று திருநாமங்கொடுத்து தன்பதிசேர அப்போது ஜலந்திரன் அசுரகுருவான சுக்கிரபகவானால் சகலவித்தை யுங்கற்று எவ்வர்ன திசையடைந்து மதோன்மத்தனாய் சபாவாக வருவது.

### ஜலந்திராசூரன்வருவது-கவி.

அஷ்டதிசைக்கிரிகளுமே நடுநடுங்க
அண்டத்துதேவரெல்லாம் திகில்பட்டோட
கஷ்டமுடன்கண்டவர்கள் காலனென்று
கைகட்டிவாய்புதைத்துக் கலங்கிநிற்க
இஷ்டமுள்ளதோழர்களு மிருபால்நாட
எண்டிசைவாழ்கெஜங்களுமே வீரிட்டோட
துஷ்டனெனமூவர்களும் பயந்துவாட
துரிதமுடன்ஜலந்திரனும் வருகின்றேனே.

### ஜலந்திரன்வருவது-தரு.

தீரன்ஜலந்திராசூரன்வந்தனனே    வீராதிவீரன்
தீரன்ஜலந்திரா    சூரன்வந்தனனே
தீரன்ஜலந்திரா    சூரன்வந்திட
தேவர்யாவரு    மனதுநொந்திட
கோரமாய்விழி    பொரிகள்சிந்திட
குவலயமெல்லா    மதிர்ந்திட (தீரன்)

அஷ்டகிரிகளுநடுநடுங்கிடவே    எந்தனைக்கண்டு
அண்டமுனிவர்கள்    நின்றொடுங்கிடவே
துஷ்டனென்றுமே    சூரரோடிட
தொல்லையென்றுமே    வீரர்வாடிட
இஷ்டமாய்சில    தோழர்கூடிட
ஏகபோகம    தாகநாடிட (தீரன்)

சத்கரிஷிகளுமெந்தனைக்கண்டு    பயமுங்கொண்டு
சாற்றுமேவலை    செய்குவார்தொண்டு
அத்தனானென    அதட்டிமீறியே
ஆருமிணையில்லா    வீரங்கூறியே
மெத்தவேமன    சித்தந்தேறியே
மேவுநாகம்போல்    தாவிசீறியே (தீரன்)

தண்டைவெண்டயங்கலகலென்றிடவே    உக்கிரமீறி
தரணியுள்ளவர்    தன்னைவென்றிடவே
கண்டபேர்களை    கலங்கவாட்டியே
கர்த்தனென்றுமே    கெடியுநாட்டியே
சண்டனையெதிர்க்    காணுதோட்டியே
ஜலந்திரனென    நாமஞ்சூட்டியே (தீரன்)

### ஜலந்திரன்-கவி.

இட்டதொருயேவலெல்லாம் புரியவல்ல
எந்தனிடஅருகிருக்குந் தூதரேகேள்

அஷ்டதிசைக்குள்ளவர்கள் அதிசயிக்க
ஆனதொருநகரமொன்று அமைக்கவேண்டும்
திட்டமுடன்மயனையிப்போ வரவழைத்து
தென்கடலின்நடுவிலே யேற்படுத்தி
சட்டமுடன்ஜலந்திரபுரி என்றுநாமம்
சம்பிரமுடன்தான்வைத்து சாற்றுவீரே.

ஜலந்திரன்-வசனம்.

ஆனால் கேளும் தூதகத்திகி இப்போது நமக்கு தகுந்த பட்டணமில்லாதபடியால் மயனை அழைத்துவந்து அஷ்டதிக்குப் பாலகர்களின் பட்டணமாகிய அமராபதி கெந்தாவதி தேஜோவதி சுத்தாவதி சமனுவதி இரக்ஷோவதி அளகாபுரி கயிலாசகிரி முதலிய பட்டணங்களுக்கும் மேலான பட்டணமாய் ஏற்படுத்தி அதற்கு நம்முடைய பேர்விளங்கும்படியாய் ஜலந்திராபுரி என்பதாய் பெயர்கொடுத்து அதி சீக்கிரமாய் வந்து பதில்சொல்லும் தூதகத்திகி.

மந்திரி-வசனம்.

அப்படியே முடிந்தாய்விட்டதையா சுவாமி.

ஜலந்திரன்-கவி.

விந்தையுள்ளபொன்மதிலும் விசித்திரமாக
விளங்குகின்றகோபுரமுங் கண்டேன்கண்டேன்
அந்தமுள்ளவீதிகளு மாடமாளி
அவனிபுகழ்நந்தவனங் கயமுங்கண்டேன்
சந்ததமுமெந்தனுடன் வாழ்ந்திருக்க
சரியொத்தகன்னி பிருந்தாளேயாகும்
நிந்தையில்லாகால்நேமி தன்னையிங்கு
நிமிஷத்தில்லழைத்தோடி வருகுவாயே.

ஜலந்திரன்-வசனம்.

ஆனால் கேளும் தூதகத்திகி நான் அரசாக்ஷிசெய்யும்படியாக மயனால் ஏற்படுத்தப்பட்ட இந்த ஜலந்திராபுரி பட்டணத்தின் கோபுரங்களையும் பொன்மதிலையும் நவரத்தினத்தாலிழைத்த தூண்களையும் மாடமாளிகை கூடகோபுரங்களையும் நந்தவனம் பூந்தோட்டம் தடாகம்வாவி முதலானதையுங்கண்டு நான் அளவில்லாத மகிழ்ச்சியடைந்தேன் ஆகிலும் இந்தப்பட்டணத்தில் என்னோடுகூட இருந்து வாழ்ந்து வருவதற்கு சரியொத்த சர்வலக்ஷணமும் வாய்ந்த கன்னிகை யாரென்று உத்தேசிக்கும்போது காலநேமியின் புத்திரியான பிருந்தாவதியே தகுமென்று நான் எண்ணங்கொண்டேனுகையால் அவளுடைய தந்தையாகிய காலநேமியை நான் அழைத்தேனென்று அதிசீக்கிரம் அழைத்து வாரும் தூதகத்திகி.

காலநேமிவருவது-கவி.

அதிவீரஜலந்திராசூரன் அழைத்திட்டசேதிகேட்டு
கதிரொளிபணிகள்பூண்டு கன்னியர்கவரிவீச
மதிமுகமிலங்கவேதான் மகரகுண்டலமுமாட
பதிபுகழ்காலநேமி பாங்குடன்வருகின்றனே.

காலநேமி-வருவது-தரு.

காசினியுள்ளோரெல்லாம் நேசமுடன்புகழும்
காலநேமியும்வந்தனே சூராதிசூரன்
ஆசையுடையமந்திரி அருகில்பணிந்துமிற்ககால
சுரு-அந்திரதுந்துமி விந்தையாசாற்ற
எந்தனைகண்டவ ரெவருமேயேற்ற (காசி)

கதிரொளியைப்போலவே கனத்தமகுடந்தன்ன
பதினையில்லமதிக்கும் பதக்கம்பளபளென்ன
சுரு-பச்சையுநவமணி வுச்சிதம்பெருக
கச்சையிருக்கியே அச்சமில்லாமல் (காசி)

அஷ்டதிசையிலுள்ளோர் அங்கஜனிவனென்ன
இஷ்டமாய்பலபணி யெங்குஞ்ஜொலித்துமின்ன
சுரு-ஏவலாளிகள் இருபுரஞ்சூழ
காவலாளிகள் கண்டுமேதாழ (காசி)

வீரன்ஜலந்திராசூரன் விரும்பியழைத்தசேதி
சீராகநானுமிப்போ சென்றுயரிவேன்நீதி
சுரு-சித்திரக்கவரிகள் பத்தியாய்போட
நத்தியேமங்கையர் நடனமுமாட (காசி)

காலநேமி-கவி.

உலகெலாம்நடுங்கவந்த ஒய்யாரவீரதீர
இலகியஜலந்திரபூபா என்னையோர்பொருட்டாஎண்ணி
நிலம்புகழ்கொலுவைநாடி நீரிப்போஅழைத்தசேதி
நலமுடனெந்தனுக்கு நவிலுவாய்நவிலுவாயே.

காலநேமி-வசனம்.

அண்ட சராசரமெல்லாம் தங்களை கண்டவுடன் பயந்து நடுங்கும்படியான வல்லமை பொருந்திய ஜலந்திரபூபதியே என்னையொரு பொருட்டாக நினைந்து இவ்விடம் வரவழைத்தகாரணம் இன்னதென்று திருவுளம்பற்றும் ஜலந்திரபூபனே.





ஜலந்திரன்-காலநேமி-தர்க்கம்-தரு.

உந்தனையழைத்தசேதி சிந்தையுமகிழ்ந்துரைப்பேன்
உத்தமா பரிசுத்தமா
எந்தனிடவார்த்தைதக்கிலீ குந்தகமுரைப்பாயோசொல்
எடுத்துமே பதில்தடுத்துமே

காலநேமி-தரு.

அப்படிக்கிஎப்பொழுதுஞ் செப்புவதுமுண்டோசொல்லு
அரியவேநீயுந் தெரியவே
சொல்படிக்கிநானடக் எப்பொழுதுந்தடையுண்டோ
சூரனேரணை வீரனே

ஜலந்திரன்-தரு.

அந்தமுமழகுடைய உந்தனிடமகனோநான்
அரியவேஎங்குந் தெரியவே
சொந்தமாய்மணமுடிக்க சந்தோஷமிகவுங்கொண்டேன்
சொல்லுவாய்பதில் விள்ளுவாய்

காலநேமி-தரு.

நல்லதுஉனக்குபதில் சொல்லுவேனேஇப்பொழுது
நாடியேமனங் கூடியே
யெல்லையெங்குந்தானறிய இப்பவேவதுவைசெய்ய
எண்ணினேன்மனம் நண்ணினேன்

ஜலந்திரன்-கவி.

மதிமுரசமுடையயெந்தன் மந்திரிசொல்லக்கேளாய்
அதிரூபபிருந்தாவை நான் அருமணமுடிக்கவேண்டு
கதிரொளிபோலேவச்சிரக் கால்களைநிருத்தியேதான்
பதிபுகழ்பந்தலிட்டு பாங்குடனுரைசெய்வீரே.

ஜலந்திரன்-வசனம்.

கேளும் மந்திரிமார்களா நான் காலநேமியின் புத்திரியாகிய பிருந்தாவதியை விவாகம்செய்துக்கொள்ளப் போகிறபடியால் நீங்கள் அதிசீக்கிரமாக மயனையழைத்து நமது பட்டணமாகிய இந்த ஜலந்திராபுரியில் வச்சிரம் கோமேதகம் மாணிக்கம் மரகதம் புஷ்பராகம் முதலான நவரத்தினங்களால் தூண்நிருத்தி முத்துப்பந்தலிட்டு மகுடதோரணம் முதலான தூங்கட்டி அலங்கிரதம்செய்து சீக்கிரம்வந்து பதில் சொல்லும் மந்திரி.

காலநேமிதரு-நோட்.

| | |
|---|---|
| ஆனந்தமானந்தம் | சந்தோஷங்கொண்டேன் |
| அரிவைக்கிமணஞ்செய்ய | பிரியமுங்கொண்டேன் |
| ஏனெந்தன்செல்விக்கி | இணையாருமுண்டோ |
| ஏற்றக்கணவனென்று | இயம்புவார்கண்டே |
| பாரிலென்கன்னியும் | பாக்கியம்பெற்றாள் |
| பாரெல்லாமாளுஞ் | சிலாக்கியமுற்றாள் |
| கோரியபெண்ணைத்தந் | குறைவறமுடிப்பேன் |
| குவலயந்தன்னிலென் | கீர்த்தியைப்படிப்பேன் |
| அருகிலிருந்திடும் | அமைச்சரேவாரும் |
| அவனியிலுள்ள | அனைவர்க்குங்கூறும் |
| சிருவயதுள்ளயென் | செல்வியாள்தன்னை |
| சீக்கிரமழைத்தோடி | வருகுவாய்முன்னே |

காலநேமி-வசனம்.

ஆனால் கேளும் மந்திரிமார்களா எனது செல்வக்குமாரத்தியாகிய பிருந்தாவதி யம்மனுக்கு விவாகம்முடிக்கவேண்டியபடியால் இந்தவுலகமெல்லாம் தெரியும்படி பறையறைவித்து தாதிமாரை அனுப்பி என்புத்திரியை அழைத்துவரும்படி கட்டளையிடுங்கள் மந்திரிமார்களா.

பிருந்தாவதிவருவது-கவி.

கந்தங்கஸ்தூரிபூசி கன்னியசாலமேந்த
விந்தையாய்பணிகள்பூண்டு மெல்லியருகில்சூழ
சந்திரவதனந்தன்னை சடுதியில்தங்கைதமுன்னே
சுந்தரபிருந்தாவென்னுந் தோகையும்வருகின்றாளே.

### பிருந்தாவதிவருவது-தரு.

வந்தாள்பிருந்தாவதிமாது அதிஜெயிலாய்
வாராள் பிருந்தாவதிமாது
செந்தூரதிலர் தமின்ன சேலைப்பளபளென்ன
 சுரு-செங்கையில்கடக கங்கணமின்ன
 திங்களைபோல்முக மெங்கிலுந்துன்ன (வந்தா)

மல்லிகைமுல்லை மலர்சூட்டிபுருவமதில்
உல்லாசமாக மையதுதீட்டி
சொல்லுமமிர்தமென்ன பல்லுமரும்போவென்ன
 சுரு-சுகந்தபரிமள மலர்களுஞ்சூடி
 உகந்ததாதிய ரோடுமேகூடி (வந்தா)

கந்தங்கஸ்தூரிவாடைவீச எனதுசேடி
சந்தனம்புனு அத்தர்பூச
சந்திரஆரமிலங்க சடைநாகமுந்துலங்க
 சுரு-சத்தியவாசக பத்தினிமாது
 இத்தரைதன்னிலே உத்தமசாது (வந்தா)

குறத்திநகரமதில்வாசன் வைத்தியலிங்கம்
கோருந்தபத்தால் வந்தநேசன்
சிரத்தையாய்வீரப்பனுஞ் செப்பும்படியாய்கேழ்க்க
 சுரு-சிருவனும்வீரா சாமியும்பாடினேன்
 திறமையாமாயவன் திருவடிதேடினேன் (வந்தா)

### பிருந்தாவதி-சருண தரு.

ஓடிவாடாபெரிய தம்பி-யென்றமெட்டு.

மல்லிகைமுல்லை. மலர்சாற்றி
நினதுபாதந் தூற்றி
இருகரத்தை யேற்றி
நான்-மனமகிழ்ந்துனது செல்வி நினதுபாதம்போற்றி
என்னையழைத்த விதம்எது
எனக்குமே இப்போது
உரைத்திடாதே தீது
இப்போ-கன்னியாள்மனமகிழ உன்னிதமாஓது

### பிருந்தாவதி-வசனம்.

ஆனால் கேளும் தந்தையே தங்களுடைய பாதாரவிந்த கமலங்களுக்குத் தங்கள் செல்வியாகிய பிருந்தாவதி அநேககோடி நமஸ்காரம்செய்தேன் நான் அரண்மனையிலிருந்த என்னை இவ்விடம் வரவழைத்த காரணம் இன்னதென்று திருவுளம்பற்றும் தந்தையே.

காலநேமி-கவி.

குஞ்சமாமலரையொத்த கன்னியென்மகளேசெல்வ
வஞ்சியேநீயும்யானு மதியுள்ளகாலம்வாழி
சஞ்சலமெண்ணவேண்டாந் தையலேவுனக்கிப்போது
மிஞ்சியேமணஞ்செய்விக்க மெல்லியேயழைத்தேனம்மா.

காலநேமி-வசனம்.

ஆனல் கேளுமம்மா குமாரச்செல்வமே நீ சூரியசந்திரர் உள்ளவரையில் கல்யாண குணத்தோடு நீடூழி வாழக்கடவது உன்னை அழைத்தகாரணம் யாதென்றால் உனக்கு திருமணம் செய்விக்கவேண்டுமென்று நான் எண்ணங் கொண்டிருப்பதால் உன்னுடைய மன இஷ்டத்தைத் தெரிவிப்பாயம்மா குமாரச்செல்வமே.

பிருந்தாவதிக்கும்-காலநேமிக்கும்-தர்க்கம்-தரு.

என்னுடைமன்னவரே கூறுங்கூறும்
என்முன்னேதெரிய நன்றாய்நீரும்நீரும்
கன்னிஎனக்கதைநீர் பண்ணுமரியநானே
சின்னவயதுடைய செல்விதெரியத்தானே (என்)

காலநேமி-தரு.

அந்தவூர்ஜலந்திரபுரி அறிவித்தேனே
அது-சொந்தமாகுமுனக்கு தெரிவித்தேனே
சிந்தைமகிழ்ந்துபதில் செப்பினல்நல்லகீர்த்தி
உந்தனிஷ்டப்படியே உடனேமுடிப்பேன்பூர்த்தி (அந்)

பிருந்தாவதி-தரு.

தந்தையேஎந்தனெதிர் நில்லும்நில்லும்
நீர்-அந்தமன்னவர்பெயர் சொல்லும்சொல்லும்
விந்தையாஇந்தவிடம் வந்ததெப்படித்தேடி
சிந்தையில்லையாலே செப்புவீர்மனங்கூடி (தந்)

காலநேமி-தரு.

எங்கும்புகழுடைய தீரனம்மா
அவர்-சிங்காரஜலந்திரா சூரனம்மா
அங்கஜன்தேவிபோன்ற அரிவையாள்நீயேயென்று
திங்கள்வதனியரே தேடிவந்தாரேஇன்று (எங்)

பிருந்தாவதி-கவி.

இத்தரைமதிக்கவந்த என்னிடதந்தையாரே
உத்தமிவுன்வார்த்தைதீக்கி லொருபோதுந்தடுப்பதுண்டோ
சித்தத்தின்படியேநீருஞ் சீர்மணமுடித்துவைக்க
பத்தினிவொத்துக்கொண்டேன் பக்ஷமாய்நடத்துவீரே.

பிருந்தாவதி-வசனம்.

ஆனால் கேளும் தந்தையே நான் இதுநாள்பரியந்தம் தங்கள் வார்த்தைக்கி பதில்வார்த்தை சொன்னதுண்டா ஆகையால் தங்கள் இஷ்டப்படியே முடித்துவையும் தந்தையே.

பொதுவசனம்.

அகோகெதப்படியென்றால் இவ்விதமாக பிருந்தாவதியானவள்விவாகத்திற்கு ஒத்துக்கொண்ட மாத்திரத்தில் காலநேமி சூரனானவன் சகல காரியத்தையும் சேகரப்படுத்தி ஜலந்திராசூரனுக்கும் பிருந்தாவதிக்கும் விவாகம்செய்கிற விதங்காண்க.



கல்லியாண-தரு.

கல்யாணப்பேரிகை யரைந்திட்டார்-சகல
உலகிலுள்ளோர்களும் நிரைந்திட்டார்
பவழக்கால்களை நாட்டிட்டார்-பர்சைப்
பந்தல்களெங்கிலும் போட்டிட்டார்
சேட்டுக்குளோப்புகள் மாட்டினார்-அப்போ
செவ்வாழைமரங்களை நாட்டினார்
சாலுங்கரகமும் வைத்தனர்-அங்கு
சரியாய்குடவிளக் கேத்தினர்
அரசாணிக்காலும் நிருத்தினர்-அப்போ
அம்மியுங்கூடப் பொருத்தினர்
ஜலந்திராசூரன்மேடை யேறவே-அங்கு
சகலஅவுணரும் நேறவே

பிருந்தாவதியுங்கூட சேரவே-அப்போ
பிராமணருமந்திரங் கூறவே
வேதியர்வோமங்கள் செய்யவே-அதில்
வேணமட்டும்நெய்யை பெய்யவே
கைகளில்கங்கணங் கட்டினர்-நல்லக்
காலத்தில்மங்கிலியஞ் சூட்டினர்
மாலையிருவரும் மாத்தினர்-அப்போ
மகிழ்ச்சியாய்சேலையுந் தூத்தினர்
அரசாணிவலம்வந்து யேற்றினர்-அங்கே
அருந்துதியைக்கண்டு போற்றினர்
அனைவரும்விருந்துண்டு மகிழ்ந்தனர்-அப்போ
அவரவர்பதிசென்று புகழ்ந்தனர்

காலநேமி-கவி.

பாக்கியவதியேயெந்தன் பாங்குள்ளமகளேகேளாய்
இலாக்கியமாயுரைத்த சீருள்ளஜலந்திரபூபா
நோக்கியஎண்ணம்போல நொடிதனில்முடித்துசீருஞ்
சீக்கிரமாகத்தந்தேன் சிறப்புடன்வாழ்குவீரே.

காலநேமி-வசனம்.

ஆனால் கேளும் மருமகனாகிய ஜலந்திரபூபனே நீகேட்டுக்கொண்ட பிரகாரம் என்குமாரத்தியை விவாகம் செய்துக்கொடுத்து உங்களுக்கு எல்லா சீதனங்களும் கொடுத்தேன் நீ என்குமாரத்தியோடு சந்தோஷமாய் வாழ்ந்துக்கொண்டிரும் நான்போய் வருகிறேன் ஜலந்திரபூபனே.

பொதுவசனம்.

அகோதெப்படி யென்றால் இவ்விதமாக ஜலந்திராசூரனும் பிருந்தாவதியும் இணைபிரியாமல் வாழ்ந்திருக்கும் காலத்தில் ஜலந்திராசூரன் ஓர்நாள் தன்மந்திரிகளைப் பார்த்து ஏதென்று சொல்வது.

ஜலந்திரன்-கவி.

தக்கவேபுகழும்பெற்ற தளபதிமாரேகேளீர்
இக்கணமெட்டுத்திக்கு இறைவரைவிஜயஞ்செய்து
எக்களிப்பாகவேதான் என்னிடமெகிடியைநாட்டி
பக்குவமாகநாமும் பாங்குடன்வருகுவோமே.

ஜலந்திரன்-வசனம்.

ஆனால் கேளுங்கள் சேனாதிபதிகளா நாமனைவரும் நமது பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு அக்கினி எமன் வாயு நிருதி குபேரன் வருணன் ஈசானன் இந்திரன் முதலியவர்களைஎல்லாம் திக்குவிஜயம்செய்து

அந்தந்த பட்டணங்களிலும் என்னுடைய கீர்த்தியே பரவும்படிக்கிச் செய்து வரவேண்டியபடியால் அதிசீக்கிரம் பயணப்படுங்கோள் சேனாதிபதிகளா.

வசனம்.

அப்படியே பயணமாய் விட்டதையா சுவாமி.

ஜலந்திரன்-தரு.

அதிவீரசூரரே வாருங்கோள்-நீங்கள்
அனைவருங்கும்பலாய்ச் சேருங்கள்
எதிரில்லாவீரமுங் கூறுங்கள்-நமக்
கிணையில்லையென்றுமே தேருங்கள்
ரதகெஜதுரகமுங் கூட்டுங்கோள் இப்போ
நலமானஜெயபேரி மீட்டுங்கோள்
தேஜோவதிநாடிச் செல்லுங்கோள்-அந்த
தீரன் அக்கினிதன்னை வெல்லுங்கள்
தென்திசைசண்டனைக் கண்டோமே-அவன்
திகிலடையவேஜெயங் கொண்டோமே
நிருதியைத்தேடிப் பிடியுங்கோள்-அவன்
நிலைகலங்கிபோட அடியுங்கோள்
சரிசரிவருணனை வாட்டுங்கள்-அவனை
ஜல்தித்தலைகாட்டா தோட்டுங்கள்
கெந்தாவதியைநாடிச் செல்லுங்கோள்-அந்த
கெம்பீரவாயுவை வெல்லுங்கோள்
அந்தஅளகைநகர் நாடுங்கோள்-எங்கும்
அதிரக்குபேரனைச் சாடுங்கோள்
அமராபதிநாடி வந்தோமே-இப்போ
அனைவருங்கும்பலாய்ச் சேர்ந்தோமே
இமையவர்தங்களைப் பாருமே-நாமும்
எதிர்த்துவந்ததாகக் கூறுமே

ஜலந்திரன்-வசனம்.

ஆனல். கேளுங்கோள் தூதுவர்களே நீங்கள் அதிசீக்கிரமாய்த் தேவேந்திரனிடஞ்சென்று ஜலந்திராபுரி பட்டணத்தை யாளப்பட்ட ஜலந்திராசூரனனவர் திக்குவிஜயம் செய்துக்கொண்டு உன்னிடத்தில் யுத்தம் செய்வதற்காக வந்திருக்கிறாரென்று தெரிவித்துவாரும் தூதர்களே.

### தூதர்வசனம்.

ஆனால் கேளுமையா தேவேந்திர மகாராஜனே எங்களரசனாகிய ஜலந்திராசுரனானவர் தங்கள்பேரில் சமராகிய யுத்தத்திற்கு வந்திருக்கின்றபடியால் தங்களிடம் தெரிவிக்கும்படி சொன்னாரையா சுவாமி.

### தேவேந்திரன்-கவி.

வீரமுந்தீரம்பெற்ற வெகுபெலதேவரேகேள்
சூரனும்ஜலந்திரனிப்போது தூருசுடன்வந்ததாலே
கோரமாயெதிர்த்துநாமுங் கொன்றுராக்ஷதரையிப்போ
சீரதாய்வருகவேண்டுஞ் சிக்கிரம்எழுந்திடீரே.

### தேவேந்திரன்-தரு.

வாருவாருங்கள் வீரரே-நமதுபகை
தீருந்தீருங்கள் தேவரே
ஆருக்குமடங்காத அதிபெலஜலந்திரனை
கூருமெமன்பதிக்கி கூட்டந்துடனனுப்ப (வாரு)
அயிராவதத்திலேறினேன் எந்தனைக்கண்டோர்
அலண்டோடவே சீறினேன்
தயித்தியரெல்லோருந் தானேநடுநடுங்க
உயித்தியஞ்செய்யாமல் வோடிப்பயந்தொடுங்க (வாரு)
ரதகெஜபடையைக்கூட்டுவீர் எதிர்த்தோர்களை
நாடிப்பின்வாங்க வோட்டுவீர்
அதமாக்கியவுணர்க எணைவரையும்வாட்டுவீர்
மதங்கொண்டபேரையெல்லா மதமாய்க்கட்டி
சதகோடியுலகெல்லாஞ் ஜெயக்கொடியைநாட்டுவீர் (வாரு)
தீரமிகவுங்கொண்டானு தேவர்கள்பெலம்
தெரியாமலிங்கு வந்தானு
ஆரபாரமாய்வந்த அவுணர்களைவெல்லுவீர்
மீறிநெருங்கினலோ சீறிசிங்கம்போலேகொல்வீர் (வாரு)

### தேவேந்திரன்-கவி.

எத்தனையசுரர்தன்னை இளஞ்சிங்கம்போலேவாட்டி
வெத்தியாய்ஜெயமடைந்தசுவீரனென்றறிந்திடாமல்
யுத்தமுஞ்செய்யவந்த வுன்னை என்வச்சிரவாளால்
சித்திரவதையுஞ்செய்து சீக்கிரங்கொல்வேன்போடா.

### தேவேந்திரன்-வசனம்.

அடாவாடா ராக்ஷதப்பயலே நான் உன்னைப்போல் எவ்வளவோ சோடிராக்ஷதாளை எல்லாம் ஜெயமடைந்த வீராதிவீரன் ஆகையால் நீ என்னுடன் ஒன்றும்யெதிர்த்து பேசாமல் உன்பட்டணம் நாடி ஒடிப்போடா ஜலந்திராசுரனே.

ஜலந்திரன்-தரு.

வாடாஇந்திரனே வந்தனை
வாட்டியேஎமன்பதி ஓட்டுவேன்பார்
யீடாயெனக்கு நீதான்-சீ-சீ
எடுத்துவிட்டேன்பாணந் தொடுத்துவிட்டேன்

சுரு-எட்டுதிசையுந்திகில் பட்டுஒடுங்கிடவே
மட்டில்லாபாணமுன்னைக் கிட்டிவருகுதடா
வாடாதேபயந்து ஓடாதே
தேடாதேபதியை நாடாதே

தேவேந்திரன்-தரு.

விட்டதோரஸ்திரத்தை அடடா
கெட்டுமுரிந்துவிழ வெட்டிஎறிந்தேன்
கிட்டிநீவாராதே உன்னை
எட்டிஅரைவேனடா மட்டிப்பயலே

சுரு-கெஞ்சிப்போதேநீயும் அஞ்சிபயந்துஓட
மிஞ்சிபாணத்தைநானும் துஞ்சிவிடுத்தேனடா
மீறாதேபதில் கூறாதே
சீறாதேஎன்னை தூறாதே

ஜலந்திரன்-தரு.

சிங்கமுகாஸ்திரமெடுத்தேன் தேவர்களெல்லாம்
சிதரிமடிந்திடவே இதோவிடுத்தேன்
பங்கமடைந்துநீயும் இந்திரா
பதரிகதரியோட பாணந்தொடுத்தேன்

சுரு-பாராயுனதுசிரம் நேராயருத்திடுவேன்
தீராஎன்வஞ்சமதை சீராமுடித்திடுவேன்
பதராதேமனம் விதராதே
சிதராதேகத்தி கதராதே

தேவேந்திரன்-தரு.

கேடுகெட்டமடப்பயலே உந்தனுக்கு
கெட்டுபோகவேகாலம் கிட்டிவந்ததோ
ஓடவழிதேடிடுவாய் இனிமேல்
உற்றவுன்சேனையெல்லாம் வெற்றிகொள்ளுரேன்

சுரு-உம்பர்பிலமரிந்துங் கெம்பீரமாய்வந்தாயே
தெம்புகுலைந்துநீயுந் துன்பமுடனொந்தாயே
தேடிடுவாய்ப்பதி நாடிடுவாய்
வோடிடுவாய்வுள்ளம் வாடிடுவாய்

ஜலந்திரன்-கர்தார்த்தம்-கவி.

மீரியேசரங்கள்விட்ட மிகுபெலயிந்திரானான்
விரியமாகயிப்போ வெகுண்டுகர்ச்சனையுஞ்செய்து
சீரியேசினமிகுத்து சிவந்துமேகண்ணிரண்டும்
பாரியகெதையினுலே

தரு.

பதரிவோடவேஅடித்தேன் மூலைக்குமூலை
சிதரிவோடவே இடித்தேன்
கதரிகலங்கிநீங்கள் காலன்பதியைத்தேட
எதிரியாய்வந்தவர்க ளெங்கும்பரவியோட
சுரு-எடுத்தேனேபாணந் தொடுத்தேனே
விடுத்தேனேபகை முடித்தேனே

ஜலந்திரன்-வசனம்.

ஆனல்கேளும் தூதர்காள் அந்ததேவேந்திரனனவன் எவ்விடமோ ஓடி பதுங்கிக்கொண்டபடியால் நீங்கள் அதிசீக்கிரமாய் சென்று அவன் இருக்குமிடத்தை தெரிந்துவந்து சொல்லுங்கள் தூதர்களே.

தூதர்கள்-வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

தேவேந்திரன்-கவி.

அய்யய்யோஎன்னசெய்வேன் அமரரேநம்மையெல்லாம்
வையகமிகழயிப்போ வாட்டியேஜலந்திராசூரன்
நையவேயடித்துநன்ருய் நகரைவிட்டோடச்செய்தான்
செய்வகையின்னதென்று செப்புவீரரியத்தானே.

தேவேந்திரன்புலம்பல்-ஜம்பைதரு.

அய்யய்யோநாமென்னசெய்வோம் அமரர்களேநம்மையெல்லாம்
வையகம்நகைத்திடவே வாட்டுராரேஅசுரரிப்போ
கர்ப்பகத்தருவுடனே காமதேனுசிந்தாமணி
அற்புதநம்பொருளேயெல்லாம் எப்போதுகாண்போமினி
ஆனையுடன்சேனைவிட்டு அமராபதியும்விட்டு
சானகத்தில்காமலேய கர்த்தன்செயலிதுவோ
அங்கமுநடுங்குதையோ அசுரரள்தனைநினைக்க
எங்குசென்றுநாமொளிவோம் இமையோரேஇப்பொழுது

தேவேந்திரன்-கவி.

இப்படிவாடியிங்கு இருப்பதால்பயனென்றில்லை
செப்பியதேவரேநாம் சீக்கிரம்பயணமாகி
ஒப்பிலாமேருசென்று வொருவருமரிந்திடாமல்
தப்பியேவொளிந்துநாமுந் தானிருந்திடுவோம்வாரீர்,

தேவேந்திரன்-வசனம்.

ஆனால் கேளுங்கள் தேவர்களே நாம் இவ்விடத்தில் இருந்துக் கொண்டு இப்படி புலம்பிக்கொண்டிருந்தால் நம்மை அந்தஜலந்திரன் கண்டால் நமக்கு அனேககெடுதி நேரிடுமாகையால் நாமனைவோரும் மகமேருகிரிக்கிச் சென்று ஒருவருமரியாமல் பதுங்கி இருப்போம்வாருங்கள் தேவர்களே.

பொதுவசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் முதல் சகலதேவர்களும் மகமேருகிரியில் ஒளிந்திருக்கும் சமாச்சாரம் தூதுவர்களால் கேழ்விப்பட்ட ஜலந்திராசூரன் யேதென்று சொல்வன.

ஜலந்திரன்-கவி.

அதிபெலதீரம்பெற்ற அவுணரேசொல்லக்கேளீர்
மதியிலாதேவரிப்போ மானகர்தன்னைவிட்டு
பதிபுகழ்மேருதன்னில் பதுங்கியேயிருப்பதாலே
எதிரிலாநாமுமங்கு யேகியேஜெயங்கொள்வோமே.

ஜலந்திரன்-வசனம்.

ஆனால் கேளுங்கள் அதிகபராக்கிரமசாலிகளாகிய அவுணர்களே தேவேந்திரனனவன் நமக்கு பயந்துக்கொண்டு தன்னுடைய சேனைகளுடன் மகமேருகிரியில் பதுங்கிக் கொண்டிருப்பதால் நாமனைவரும் அவ்விடம்சென்று அவனை அதாகதம்செய்து ஜெயமடைந்துவருவோம் வாரும் அவுணர்களே.

அவுணர்-வசனம்,

அப்படியே செல்வோமையா சுவாமி.

ஜலந்திரன்-தரு.

வருவீர்மதகரியொடு பரியுடன்
வளமிகும்புகழுருளு சூரர்களே
பெருவீர்பல வாயுதங்கரந்தனில்
பேரொலிபட வீரதீரர்களே

அரைவீர்ஜெய பேரிகையண்ட
ரெண்டபுவனமு நடுங்கிடவே
திரைவீர்மக மேருவெல்லாம்நீர்
நிலைகலங்கியே தேவரொடுங்கிடவே

ஜலந்திரன்-வசனம்.

ஆனல் கேளும் தூதர்களே நாம் இந்தமகமேருகிரிக்குவந்து சேர்ந்தபடியால் அந்த தேவேந்திரனிடம் சென்று நான் யுத்தத்திற்கு வந்திருப்பதாக தெரிவித்துவாரும் தூதர்களே.

தூதர்-வசனம்.

ஆனல் கேளுமையா தேவேந்திர மகாராஜனே எங்களரசனாகிய ஜலந்திராசூரன் தங்கள்பேரில் யுத்தத்திற்கு வந்திருக்கிறாரையா தேவேந்திர மகாராஜனே.

தேவேந்திரன்-கவி.

கெடியுடன்தூதர்வந்து கெம்பீரமாகச்சொல்ல
இடிகேட்டநாகம்போலே யேங்கியேநடுநடுங்கி
அடியற்றமரம்போல்சாய்ந்து அலரியேமூர்ச்சையாகி
வடிவுள்ளஇந்திரரூபன் வாடியேபுலம்புவானே.

தேவேந்திரன்-புலம்பல்-தரு.

பார்க்கடலில்பள்ளிகொள்ளும் அச்சுதனே-எங்கள்
பங்கயசெங்கண்மாலே அச்சுதனே
மார்க்கமாந்தொண்டர்வினை அச்சுதனே-எல்லாந்
தீர்க்கும்மாயாவுதாரா அச்சுதனே
மூர்க்கன்ஜலந்திரனும் அச்சுதனே-இப்போ
முனைந்துமேவாட்டுகிறான் அச்சுதனே
கார்க்கக்கடனுனக்கு அச்சுதனே-இப்போ
கருணைகூர்ந்தெங்கள்மீது அச்சுதனே

தேவேந்திரன்-வசனம்.

அரிகரி சங்குசக்ர அவுதாரா ஜானகிமர்த்தனா நாங்கள் தெய்வலோகத்திலிருந்த எங்களை ஜலந்திராசூரனென்பவன் எங்கள்பேரில் யுத்தம் புரிந்து எங்களால் முடியாமல் இந்த மகமேருகிரியில் வந்துபதுங்கியும் எங்களைவிடாமல் சமருக்கு வந்திருக்கிறபடியால் இந்த சமயம்வந்து எங்களை காத்து ரக்ஷிக்க வேண்டுமையா சுவாமி பகவானே.

பொதுவசனம்.

இவ்விதமாக தேவேந்திரன் தோத்திரஞ்செய்யும்போது மகாவிஷ்ணுவானவர் வருவது.





மகாவிஷ்ணு-வருவது-கவி.

இந்தவிதமிந்திரனு மனதுவாடி
　　யேங்கியேஸ்தௌவுத்தியமுஞ் செய்யும்போது
சந்ததமும்ரக்ஷிப்பு கர்த்தனை
　　சற்குணராம்சாத்வீக குணத்தால்வந்தோர்
விந்தையுள்ளசங்குசக்ர கோதண்டகட்கம்
　　விளங்கிடவேபலபணியுந் தகதகென்ன
அந்தமுள்ளகெருடன்மே லாரோகணித்து
　　அரிகரிகண்ணபிரான் வருகின்றாரே.

மகாவிஷ்ணு-வருவது-தரு.

கருமுகில்வண்ணனிதோவந்தார் காசினியெல்லாம்
கார்த்திடுங்கண்ண பிரான்வந்தார்
திருமூவரிலொருவர் ஜெகத்தில்மிகப்பிரதாபர்
தேவனுநானே வாமனமானவர் தானே
　　சு-ஸ்ரீராமனாய் பாரிலுதித்தேன்
　　வீரராவணன் பேரையழித்தேன் கரு
மச்சாவதாரங்கொண்டமாயன் சோமுகன்தன்னை
லச்சையடைய கொன்றநேயன்
ரக்ஷிப்புகர்த்தனென்று இச்செகத்தோர் துதிக்கும்
நாரணநானேபரி பூரணன் தானே
　　சுரு-நாடியேவராக மூர்த்தியாய்சென்றேன்
　　தேடியேஇரணியா க்ஷதனையுங்கொன்றேன் கரு

முப்புரத்தையெரித்த யீசர்கரத்திலோரான்
தப்பில்லாசிலை யானநேசர்
ஒப்பில்லாமோகினியாய் ஒழித்தேன்பத்மாசூரனை
உத்தமனானே பரிசுத்தமன்தானே
 சு-ஓதியஇரணிய னுடலையுங்கிழித்தேன்
 வாதையுந்திரவே பேரையுமழித்தேன் கரு
தேசம்புகழ்கூடலூர் வாசன்ரெகுபதா
தேவியருளால் வந்தநேசன்
பாசமுடன்பாவாடை படையாட்சியாரளித்த
பாலனுநானே வீராசாமியுந்தானே
 சு-பட்சமாகஇச் சரிதையைபாடினேன்
 இஷ்டமாய்கண்ணை னிணையடிதேடினேன் கரு

தேவேந்திரன்-கவி.

காமனையீன்றெடுத்த கண்ணனேபோற்றிபோற்றி
வாமனரூபமான வள்ளலேபோற்றிபோற்றி
பூமனையளித்தவுந்தன் பொற்பாதம்போற்றிபோற்றி
சாமளசருணமாயா சாஷ்டாங்கம்போற்றிபோற்றி

தேவேந்திரன்-வசனம்.

சருணஞ் சருணமையா சங்குசக்கரகட்க கோதண்டபாணியாகிய ஸ்ரீ கண்ணபிரானே தங்கள் பாதாரவிந்த கமலங்களுக்கு அநேககோடி வந்தனம் வந்தனமையா சுவாமி.

விஷ்ணு-கவி.

இந்திரபூபாநீயும் இமையவரோடுவாழி
அந்தமாவுன்பதியைவிட்டு அமரர்களுடனேநீயும்
விந்தையாயென்னைத்தேடி விரும்பியேயழைத்ததென்ன
சிந்தைபுமகிழ்ச்சியாக சீக்கிரமுரைசெய்வாயே.

விஷ்ணு-வசனம்.

ஆனல் கேளும் தேவேந்திரமகாராஜனே நீயும் தேவர்களும்எக்காலமும் க்ஷேமம்பொருந்தி வாழக்கடவது நீ உன்னுடைய பட்டணத்தைவிட்டு மனவாட்டத்துடன் இவ்விடம்வந்த காரணத்தை இன்னதென்று சீக்கிரம் சொல்லுமப்பா தேவேந்திர மகாராசனே.

தேவேந்திரன் தரு-தர்க்கம்.

அந்தசேதிபுரைக்க கண்ணனேஎந்தன்
சிந்தைவாடியே மணிவண்ணனே
உந்தனிடத்திற்கூர வுள்ளம்நடுங்குதிப்போ
உத்தமா பரிசுத்தமா -

விஷ்ணு-தரு.

வாடிக்கலங்கவேண்டா மிந்திராமன
வாட்டமடையவேண்டாஞ் சுந்திரா
தேடிநினைந்தவிதம் நாடியெனக்குரைத்து
நீருவாய்குரை யாருவாய்

தேவேந்திரன்-தரு.

நீரன்ஜலந்திரனு மையனே அவன்
திக்குவிஜயஞ்செய்து மெய்யனே
ஆரபாரமாய்வந்து அடித்துதுரத்திவிட்டான்
அப்யனே சக்ரகையனே

விஷ்ணு-தரு.

அந்தஅரக்கன் தன்னை கொல்லவேஇந்திரா
ஆராலுமுடியாது வெல்லவே
எந்தனுக்குமேபய மெடுக்குதவன்பேர்சொல்ல
ஏகுவாய்வுன்பதி போகுவாய்

தேவேந்திரன்-கவி.

இப்புவிகடுகடுங்கும் இரணியன் தன்னைக்கொல்ல
செப்பியநரசிங்கமாய்ச் சீரியேவுடல்கிழித்த
ஒப்பில்லாவுந்தன்மாய மொருவராலறியப்போமோ
அர்ப்பணுனென்னைநீரும் ஆதரித்தாள்வாய்போற்றி

தேவேந்திரன்-வசனம்.

சருணஞ் சருணமையா சுவாமி பகவானே ஆதியில் எங்களை எல்லாம் அனேக இம்சைபுரிந்துவந்த இரணியனை சம்மாரஞ்செய்யும்படி கம்பத்தில் நரசிங்கமாகவந்த கர்த்தனே தாங்கள் என்பேரில் கிருபா நோக்கம்வைத்து அந்த ஜலந்திராசூரனை சம்மாரஞ்செய்து எங்களுக்கு சுகவாழ்வளிக்க வேண்டுமையா சுவாமி.

விஷ்ணு-கவி.

அஞ்சியேதாள்பணிந்த அமரரேசொல்லக்கேளீர்
சஞ்சலப்படவும்வேண்டாம் சற்றுநீர்மறைந்திருங்கள்
வஞ்சகசூரன்வந்தால் வாட்டியேஅவனைநானும்
தஞ்சமென்றெமன்பதிக்கி தான்சேரவோட்டுவேனே,

விஷ்ணு-வசனம்.

ஆனால் கேளுந் தேவேந்திரமகாராஜனே நீ யாதொன்றுக்கும்அஞ்சவேண்டாம் அந்த ஜலந்திராசூரனெனவன் இவ்விடம் வந்தால் அவனுடன் சமர்புரிந்து அவனை காலன்பதி சேர்க்கிறேன் நீங்கள் சற்றுமறைவாயிருங்கள் தேவர்களே.

பொதுவசனம்.

இவ்விதமாக தேவேந்திரனுக்கு மகாவிஷ்ணுவானவர் தைரியங்கூரி தேவேந்திரனை பதனப்படுத்தி வைத்திருக்கும்போது இந்த சமாச்சாரமெல்லாம் தூதுவரால் கேழ்விப்பட்ட ஜலந்திராசூரன் ஏதென்று சொல்வது.

ஜலந்திரன்-கவி.

ஆதியிலேதேவருக்காய்ப் பரிந்துமேதான்
  ஆண்மையுள்ளநமதுகுல வசுரரான
ஓதியதோரிரணியனு மிரணியாக்கன்
  உற்றதொருசோமுகனு மனேகம்பேரை
வாதையுரவேமடித்தக் கள்ளனிப்போ
  வானவர்க்குச்சகாயனுய் வந்ததாலே
கியாதிபெறநாமவனை முன்புவாட்டி
  கெஞ்சிடவேதேவரைப்பின் வதைசெய்வோமே.

ஜலந்திரன்-வசனம்.

ஆனால் கேளுங்கள் தோழர்களே ஆதிநாளையில் தேவர்களுக்குப் பரிந்து நமது குலத்தவராகிய இரணியன் தெண்டகாசூரன் சோமுகாசூரன் முதலிய இன்னுமனேக அசுரர்களை யெல்லாம் கருவருத்த மகாவிஷ்ணுவாகிய திருட்டுப்பையன் இப்போதும் தேவேந்திரனுக்குச்சகாயனுய் நமதுபேரில் யுத்தத்திற்கு வந்திருப்பதால் அவனைப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமாகையால் அவனை அதிசீக்கிரமாய் சமருக்கு வரச் சொல்லுங்கள் அவுணர்களே.

மகாவிஷ்ணு-சண்ட- தரு.

நில்லடா ஜலந்திரா சூரனேவுன்னை
நிமிஷத்தில்கொல்லுவேன் தீரனே
புல்லாகவேயெனையெண்ணி போர்செய்யவந்தாயே
வெல்லாமல்விடுவேனே வீரதீரனேவுன்னை
விடுப்பேனேபாணந் தொடுப்பேனேவுன்னை
மடிப்பேனேபுகழ் படிப்பேனேயிப்போ நில்

ஜலந்திரன்-தரு.

மடிப்பேனென்றவுன்னை    வாட்டுவேன்-சீ-சீ
மடையனேவுன்பதி    யோட்டுவேன்
தடிப்பானவார்த்தைகள்    தாட்டியாய்ப்பேசாதே
துடிப்பாகப்பாணங்கள்    தொடுத்தேனுன்வீசாதே
தூராதேயென்னை    கூராதேபதில்
சீராதேமுன்னே    வாராதேஜெயம் மடிப்

மகாவிஷ்ணு-தரு.

தக்கதோர்வாள்செதை    யெடுத்தேனேவுன்மேல்
பக்குவமாகயான்    விடுத்தேனே
திக்குமுக்காடியே    தீரசூரரெல்லாந்
கக்கிக்குருதிவாயால்    காலன்பதியடைய
காட்டியேபாணம்    பூட்டியேயுன்னை
வாட்டியேசெடி    நாட்டுவேனிப்போ தக்க

ஜலந்திரன்-தரு.

சீச்சீ அறிவில்லா    மூடனேஉன்னை
சிதைப்பேன்வாளால்    குடிகேடனே
பூச்சிகாட்டுமுந்தன்    புரட்டெல்லாமறிகுவேன்
ஆச்சு துனக்குக்கால    மந்தகன்பதிசேர
அறிந்தேனேவீரந்    தெரிந்தேனேயானும்
எறிந்தேனேபாணஞ்    சொரிந்தேனேயிப்போ சீச்சீ

மகாவிஷ்ணு-கந்தார்த்தம்.

விட்டதோர்பாணமெல்லாம் விருதாவாய்ப்போகச்செய்து
சட்டமாயுன்னைக்கொல்ல தனுவதைப்பூட்டியேதான்
அட்டகாசங்கள்செய்த அனைவருமெமனூர்சேர
மட்டில்லாபாணந்தன்னை,

தரு.

மாரிமாரிவிடுத்தேனே    உந்தனைக்கொல்ல
வாரிவாரி    தொடுத்தேனே
சீரிவுனைமடிக்க    கோரிவருகுதடா
சு-செல்லாதேஎதிர்    நில்லாதேபதில்
சொல்லாதேகட்சி    வெல்லாதேயிப்போ மாரி

ஜலந்திரன்-கந்தார்த்தம்.

மட்டில்லாபாணம்விட்ட மாயனேயுன்னையானும்
அட்டியில்லாமலிப்போ அந்தகன்பதியனுப்ப
திட்டமாயெண்ணியேநான் சீக்கிரங்குதித்துயிப்போ
கிட்டியேவாரிந்தாக்கி

தரு.

கேசரிமார்க்கமெரிந்தேனே உந்தனுடைய
கெம்பீரப்பிலம் தெரிந்தேனே
தாசரிப்பயலேகீயுந் தரையில்விழுகுமுன்னே
சு-தாக்குவேன்பொடி யாக்குவேனுயிர்
போக்குவேனத மாக்குவேனுனே கேச

மகாவிஷ்ணு-கந்தார்த்தம்.

அந்திரந்தனிலெரிந்த அசுரனேயானுமிப்போ
தந்திரமாகவேதான் தரணியில்வந்துநின்று
உந்தனைமடிக்கப்பூரா யுள்ளத்திலெண்ணங்கொண்டு
பந்துபோலுன்னைத்தூக்கி,

தரு.

பாரடாயெரிந்துவிட்டேனே எமன்பதிநீ
சேரடாயெரிந்து விட்டேனே
கோரடாஅந்தகன்பதி நேரடாஉனக்குவிதி
சு-கூட்டினேன்வழி காட்டினேன்சரம்
பூட்டினேன்சேனை யோட்டினேனிதோ பார

ஜலந்திரன்-கந்தார்த்தம்.

அண்டசராசரபுவனந் தத்தளிக்க
ஆக்கரித்துயிருவிழியும் பொரிகள்சிந்த
வண்டனேநீயென்முன்னோர் தமைவதைத்த
வஞ்சகத்தைத்தீர்த்திடவே மனதிலெண்ணி
சண்டனுமேசகியாமல் பயந்தொடுங்க
சத்தசாகரமெல்லாம் நடுநடுங்க
எண்டிசைவாழ்கெஜங்களுமே வீரிட்டோட

தரு.

எடுத்துயெடுத்துவிடுத்தேன் அனேகபாணந்
தொடுத்துதொடுத்து விடுத்தேன்
மடித்துந்தனைநரிநாய் கடித்துத்தின்றுமேரத்தங்
குடித்துக்கொண்டுமேவெரி பிடித்துயலேந்திடவே
சு-கொண்டனேஜெயங் கண்டனேயெங்கும்
விண்டனேஅட முண்டனேயிதோ எடுத்

மகாவிஷ்ணு-கவி.

அந்தமுள்ளஜலந்திரனே யெனைசெயிக்க
ஆகாதுமெவருக்காலு முந்தனாலே
சொந்தமுள்ள அதிவீர தீரரான
சூராதிசூரர்களை நான்மடித்தும்

உந்தனுடன்யிருபதினுயிர மாண்டாக
உக்கிரமாய்சமர்புரிந்தும் முடியவில்லை
சிந்தையதுமகிழ்ந்துநா மிருவருந்தான்
சினேகிதராய்ப்பிரியாமல் வாழலாமே

மகாவிஷ்ணு-வசனம்.

ஆனால் கேளும் ஜலந்திராசூரனே நான் உன்வம்சத்தாராகிய இரணியன் தெண்டகாசூரன் சோமுகாசூரன் பத்மாசூரன் பாணசூரன் மாபெலி முதலிய அனேக அசுரர்களையெல்லாம் நிமைநேரத்தில் சம்மாரஞ்செய்திருந்தும் இப்போது நாமிருவருங் இருபதினுயிரம் தேவவருஷம் போர்புரிந்தும் ஒருவர்க்கொருவர் தோர்ப்பு கெலிப்பு ஏர்ப்படாதபடியால் நீயே சுத்தவீரனென்று நான் மெச்சினேன் ஆகையால் நாமிருவரும் வொருவர்க்கொருவர் விரோதமின்றி எப்போதும் சினேகிதராயிருப்போம் நான் வைகுந்தம் போய்வருகிறேன் ஜலந்திராசூரனே.

பொதுவசனம்.

இவ்விதமாக மகாவிஷ்ணுவானவர் ஜலந்திரனிடம் விடைபெற்று வைகுந்தஞ்சேர அப்போது ஜலந்திராசூரன் தேவர்களைத் தேடிப்பார்க்கையில் அவர்கள் அகப்படாதபடியால் தூதர்களை அனுப்பி அந்தத்தேவர்கள் யெவ்விடத்திலிருந்த போதிலும் பார்த்துவந்து சொல்லும்படிக்கிக் கட்டளையிட்டு தன்பட்டணமாகிய ஜலந்திராபுரிபோய்ச்சேர அப்போது மகம்மேருகிரியிலிருந்த தேவர்கள் ராக்ஷதாளுக்குப் பயந்துக்கொண்டு கயிலாசபதியாகிய பரமசிவத்தினிடம் முறையிட்டுக் கொள்ளும்படி வரும்போது பரமசிவமானவர் சபாவாக வருவது.

பரமசிவன்-கவி.

அந்தமாய்த்திங்கள்கெங்கை யன்புடன்முடியிற்சூழ
சொந்தமாய்வாமபாகஞ் சொகுசுடனுமையாள்வாழ
பந்தியாய்முனிவரெல்லாம் பாங்குடன்பணிந்துநிற்க
விந்தையாய்ரிஷபமேரி விமலனூர்வருகின்றாரே.

பரமசிவன்வருவது-தரு.

மங்கையுமையாள்பாகன் திங்களணிந்தயோகன்
சங்கரதேவர்வந்தேன் விடையிலேரி
சங்கரதேவர் வாரேன்
கெங்கைமுடியில்தோற்ற எங்கும்புகழ்ந்துபோற்ற
சு-கர்த்தரென்றுமே இத்தரைபுகழ
சித்தரென்றுமே உத்தமர்மகிழ மங்

கையில்மழுமான்கொண்டு மெய்யில்திருநீர்பூண்டு
துய்யரிஷியோர்க்கண்டு செய்யளனக்குத்தொண்டு
சு-தும்புருநாரதர் தம்புருபாட
அன்புடன்பதஞ்சலி சம்பிரமாய்நாட மங்
காமனையெரித்தவர் கரிதனையுரித்தவர்
ஏமனையுதைத்தவர் பூமனைசிதைத்தவர்
சு-இத்தரைபத்தர்கள் மெத்தவேயேற்ற
நத்தியேமுத்தர்கள் சுத்தியேபோற்ற மங்
அருவுருவானயீசர் அன்பர்தனக்குத்தாசர்
கருவுக்கும்பிரகாசர் கையிலையங்கிரிவாசர்
சு-காரணனாகிய பூரணநாதன்
சீரணனாகிய ஆரணபோதன் மங்

பொதுவசனம்.

இவ்விதமாக பரமசிவமானவர் சகல ரிஷீஸ்பராள் முனீஸ்பருள் நாரதர் தும்புருவர் கருடகாந்திருவர் பதஞ்சலி வியாக்கிரமபாதர் முதலானவர்களோடு கயிலாசத்தில் வீற்றிருக்கும்போது தேவேந்திரன் தேவர்களோடுவந்து யேதென்று சொல்வது.




தேவேந்திரன்-தேவாரம்.

ஆதியேபரனேபோற்றி அருமறைமுடிவில்நின்ற
சோதியேசுடரேபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
ஓதியவேதாபோற்றி உன்னிருபாதம்போற்றி
நீதியேநிமலாபோற்றி நின்னடிபோற்றிபோற்றி

தேவேந்திரன்-தரு.

சுருதிமுடிவினில் ஜொலிக்கும்பராபரநாதா
கருதிவந்தோமிங்கு கருணைபுரிந்திடுவீர்வேதா
திரிபுரசம்மாரா தேவரீரெங்களைக்காரும்
பிரியமாகயிப்போ பிஞ்சகாயென்குறைதீரும்
பாவிஜலந்திரன்பதியை விட்டோட்டியேஅய்யனே
ஆவியைபோக்கவே தாவிவருகின்றான்மெய்யனே

தேவேந்திரன்-வசனம்.

ஓம் அரகரா மகாதேவா சம்போசங்கரா காளகண்டா திருநேத்திரா உமாமயேசா தங்கள் பாதத்திற்கு அனேகநமஸ்காரம் நாங்கள் அமராபதியில் சுகமாகயிருந்தயெங்களை ஜலந்திராசூரன் அடித்து அதாகதம்செய்து எங்களைத் துரத்திவிட நாங்கள் மகம்மேருகிரி சாரலுக்கு வந்து பதுங்கிக்கொண்டிருக்கும்போது அவ்விடத்திற்கும் எங்கள்பேரில் யுத்தத்திற்கு வருவதையரிந்த மகாவிஷ்ணுவானவர் எங்களுக்குப் பரிந்து அவ்விடம்வந்து இருபதினாயிரம் தேவவருஷம் அவனோடுபோர் புரிந்தும் அவனை ஜெயிக்கமுடியாமல் சமாதானமாய் சினேகிதங் கொண்டாடி போய்விட்டார் அதையரிந்த ஜலந்திராசூரனனவன்மருபடியும் எங்களையெல்லாம் கொல்லும்படியாய் தேடி வருகிறானதையால்எங்கள் பேரில் கிருபைகூர்ந்து கார்த்து ரக்ஷிக்கவேண்டுமையா சுவாமி கர்த்தனே.

ஈஸ்பரன் தரு-காவடிச்சிந்துவர்னமெட்டு.

வாழிவாழிநீயும் வானவர்கோனேநீ
வாருமேமனந்தேருமே குறையாருமேஅப்பா
வச்சிராயுதனே அச்சமில்லாமலே
வாழியேநீ நீடூழியே வாழி

தேடியரக்கனுன்னை வோடிவந்தாலிங்கு
தீர்க்குறேன்வுயிர்போக்குறேன் உன்னைகாக்குறேன்யிப்போ
தேங்கிவாடவேண்டாம் நீங்கள்கொஞ்சநாளில்
தெரிகுவீர்யெல்லா மரிகுவீர் தேடி

ஈஸ்பரன்-வசனம்.

கேளும் தேவேந்திரமகாராஜனனே நீயும் தேவர்களும் நீடூழிகாலம் வாழக்கடவது அந்த ஜலந்திராசூரன் உன்னைத் தேடிக்கொண்டு இவ்விடம் வரும்பட்சத்தில் நான் யேதாவது தந்திரஞ்செய்து அவனை மடித்துவிடுகிறேன் நீயாதொன்றுக்கும் அஞ்சாமல் இவ்விடத்திற்றனே இரும் தேவேந்திரமகாராஜனே.

பொதுவசனம்.

இவ்விதமாக ஈஸ்பரரானவர் தேவேந்திரனுக்கும் தேவர்களுக்கும் அபயஸ்தம்கொடுத்து கயிலாயத்தில் பதனமாய் வைத்திருக்கும்போது அந்தசமாச்சாரமெல்லாம் தூதுவனால் கேழ்விப்பட்ட ஜலந்திராசூரன் யேதென்று சொல்வது.

ஜலந்திரன்-தரு.

ஆஹா அவுணரே வாருங்கோள்-அந்த
அரன்செய்தமார்க்கத்தைப் பாருங்கோள்
ஓஹோ அவனுக்கிணை யொருவருமில்லையா
ஓட்டுவோம்வாட்டுவோம் நாட்டுவோம்கெடிதன்னை ஆ

ஜாதிக்குலமில்லா ஆண்டியை-இப்போ
ஜாடிமடித்திட வேண்டியே
நீதில்லாநம்குல நீரரணேவோரும்
தேடியேநாடியே வோடியேவாருங்கள் ஜா

எங்குந்திரிந்துபிச்சை யெடுத்தவன்-மெத்த
ஈனமானமெல்லாம் விடுத்தவன்
அங்கமெல்லாஞ்சாம்ப லணிந்துயீமந்தன்னில்
அலேந்தானேகுலேந்தானே நலிந்தானேவெரிகொண்டு எங்

அமரருக்கிடமது கொடுத்தானே-நமக்
கஞ்சிப்பயந்ததை கெடுத்தானே
இமையவருடனந்த யீசனையும்வாட்ட
ஏகலாம்போகலாம் வேகமாய்வாருங்கள்

ஜலந்திரன்-வசனம்.

ஆனால் கேளும் மந்திரிமார்களா நம்மையெல்லாம் மதியாமல் தேவர்களுக்கு இடம்கொடுத்து வைத்துக்கொண் டிருக்கும் ஆண்டிப் பயலாகிய பரமசிவனையும் தேவர்களையும் கயிலாசம் சென்று இதே க்ஷணம் மடிக்கவேண்டிய படியால் என்தேவியாகிய பிருந்தாவதி யிடம் தெரிவித்துவிட்டு போகவேண்டு மாகையால் அதிசீக்கிரமாய்என் தேவியை வரவழையுங்கள் மந்திரிமார்களே.

பிருந்தை-வருவது-தரு.

பதியிலழகுடைய பாவைபிருந்தாவதி
அதிகசிங்காரமுடன் அரிவையும்வாருள்
செங்கைகடகமின்ன சேலைபளபளென்ன
தங்கவொட்டியாணந்தன்ன தையலும்வாருள்

கொண்டைகொப்பிகளாட வண்டுகீதங்கள்பாட
செண்டுஸ்தனமுடைய செல்வியும்வாருள்
பட்சமுடையமன்னன் தட்சணமழைத்தசேதி
இட்சணமரியவேண்டி யேந்திழைவாருள்

பிருந்தை-சருணா-தரு.

அகிலம்புகழும் மலையறார் என்றமெட்டு.

மகிதலம்புகழதிகசுந்தரா மன்னவாபோற்றினேன்
மன்னவாபோற்றினேன் மலரடிபோற்றினேன்
மல்லிகைமலர் சாற்றி-மன
மகிழ்ந்துரோஜா சாற்றி
மாதுவுன்னிரு பாதம்பணிந்தேன்
ஏதழைத்தது வோதுமரிய மகி

ஜலந்திரன்-தரு-ஷை.

கொஞ்சுங்கிளியேவஞ்சமில்லா கோதையேவாழிநீ
கோதையேவாழிநீ வாதையில்லாமல்நீ
கோகிலமே மானே-அடி-
பாகுமொழி தேனே
கூருவேனடி காரிழையேநான்
தேருவாய்மனந் தாருவாய்விடை கொ

பிருந்தை-தரு.

சுகிர்தசுந்தரவதனரூப சொகுசுள்ளமாரனே
சொகுசுள்ளமாரனே புகழுமொய்யாரனே
சூதில்லாமல் கூறு-மன
வாதையதை தீரு
சொல்லுமரிய வல்லியெனக்கு
உள்ளவிஷயம் வள்ளநன்ருய் சுகி

ஜலந்திரன்-தரு.

பதரியமரர்கதரியோட பரமனுஞ்சேர்த்தனன்
பரமனுஞ்சேர்த்தனன் பயமதைதீர்த்தனன்
பதரஅவனை வாட்டி-அவன்
பதியையும் விட்டோட்டி
பாவைமுன்னே தாவிவருவேன்
மேவியபிராண தேவிவிடைதா பத

பிருந்தை-தரு.

ஓடிவாடாபெரியதம்பி என்றமெட்டு

சிங்காரபிராணநாதாவாரும் சிவனிடத்தில்நீரும்
செல்லவும்போமே கூரும்-நான்
செப்புமொழிமீறிசென்றால் தப்புவந்துநேரும்

ஜலந்திரன்-தரு.

என்னமொழியுரைத்தாய்மாதே எந்தனிடமிப்போதே
யெதிர்த்துரைத்தால் நீதே
யீசனைஜெயமடைந்து யிதோவருவேன்கோதே

பிருந்தை-தரு.

பாலன்வீராசாமியின்பாட்டு செவியில்நன்றாய்கேட்டு
புத்தியையிழந்து நாட்டு-அந்த
பரமருடன்சமர்புரியும் எண்ணமதையோட்டு

ஜலந்திரன்-தரு.

மாராவடிவழகிமானே வீராசாமிபாட்டுதானே-நன்று
யினிக்குதடி தேனே-அந்த
வன்னியருஞ்சொன்னபடி போய்வாரேண்டிநானே

பிருந்தைகந்தார்த்தம்-கவி.

தொண்டர்க்குத்தொண்டராகி தூயரொலாமகூற்றுநீல
கண்டர்க்குநேருந்துரோகங் கருத்தினில்நினைந்திடுகில்
சண்டனுந்தக்கன்காமன் சடுதியில்மடிந்தார்ப்போல
கொண்டவுன்மதமடங்கி

தரு.

கூற்றுவன்பதிசேருவீர் எனதுமொழி
ஏற்றுவுன்கோப மாறுவீர்
ஆற்றலுடையசூரர் அவனியையாண்டாரு
ஏற்றுவாகனர்தம்மை யெதிர்த்தவர்மீண்டாரு

ஜலந்திரன்கந்தார்த்தம்-கவி.

மெல்லியெந்தன்தேவியரே சொல்லக்கேளாய்
மேன்மையுடன்பரமனைநீ பெரிதாய்சொன்னாய்
கல்லடியும்வில்லடியும் பட்டுமேதான்
கானகத்துவேடனெச்ச லுண்டதுரோகி
நல்லசிவன்ஞாயமதை சொல்லவென்றால்
நாட்டினிலேஅனைவருக்கும் நகைப்பேயாகும்
எல்லையெல்லாம்பிரந்துண்ட ஆண்டிப்பையன்



தரு.

ஈசன்யென்னடியிலவான் அவனைக்கொல்ல
இருக்கின்றேன் நானுங்குலவான்
தூசுபோலவேகாற்றில் தூற்றிமடிப்பேனடி
வாசமானகயிலைமலையை விட்டோட்டுவண்டி ௩௧

பிருந்தை-தரு.

அருவுருவாய்விளங்கும் ஈசனாச்சே
அவருடன்போர்புரிந்தால் மோசமாச்சே
கருவுக்குமமுதூட்டுங் கடவுளுமவராச்சே
செருவமடைந்துசென்றால் சீர்த்திக்குறைவாச்சே

ஜலந்திரன்-தரு.

தந்தைதாய்பந்துக்க ளுண்டா-சீச்சீ
தரிக்கஅவனுக் காடையுண்டா
அந்தப்பாண்டியன்கையா லடிபட்டானேன்னன்றாய்
எந்தக்காரணத்தாலே ஈசனைப்பெரிதென்றாய்

பிருந்தை-தரு.

அகிலகாரணனான அத்தனாச்சே
அவரைதினம்பணிந்தால் முத்தியாச்சே
புகலஅவர்பெருமை பொருந்துமோசேஷனாலும்
சகலவல்லவரென்று சாற்றுவார்களேமேலும்

ஜலந்திரன் - தரு.

பிள்ளையோ பெரு வயருள்ளவன் - அடி
பேதைநீயோ நானின்னும் விள்ளுவேன்
உள்ளபடி மண்ணை வொட்டன்போல்சுமந்தானே
கள்ளியே அய்வேலன் காய்தனிலொளிந்தானே

பிருந்தைகந்தார்த்தம்-கவி.

ஆதிநடுவீராகி அகண்டபரிபூரண அத்தனுய்சித்தனுகி
சோதியொடுசுடராகிசதுர்வேதமுடிவாகி சொல்லரியவள்ளலாகி
நீதியுளபரமாகிவுயிருக்குவுயிராகி நித்தனுய்முத்தனுகி
பதிமதிநதியணியும் நாதனை ஜெயித்திட—

தரு.

பாருமும்மாலே ஆகாதே-பரமரிடம்
நீருஞ்செல்லவும் போகாதே
ஆஞ்ஞையில்லாமல் அரசாள்வீர்சிலகாலம்
வாருமரன்மனைக்கி மன்னவாசெல்வோம்மேலும்

ஜலந்திரன்கந்நார்த்தம்-கவி.

தாய்தந்தையுறவின்முறை தனக்கில்லாமல்
தனித்திருந்துவோடெடுத்து அய்யம்பேர்த்து
பேய்வாழுஞ்சுடுகாட்டில் புரண்டலைந்து
பித்தனைப்போல்திரேகமெல்லாம் சாம்பல்பூசி
ஓயாமல்யெலும்புநரம்பை நேர்லணிந்து
ஆரெல்லாம்வாங்கியுண்ட வெரியன்தன்னை
வாயாரமகிழ்ந்துரைத்த வஞ்சியுன்னை

தரு.

வாடிக்கலங்கவாட்டுவேன் அரன்மனைநீ
வோடிப்பதுங்க வோட்டுவேன்
வேடிக்கையானவார்த்தை மெல்லியரேசொல்லாதே
தேடிப்பதியடைவாய் தேவியரேநில்லாதே

பொதுவசனம்.

இவ்விதமாக பிருந்தாவதி அனேகவிதமாய் தடுத்தும் ஜலந்திராசூரன் கேளாமல் ரதமேரி அசுரர்படைகளை கூட்டிக்கொண்டு பரமசிவத்தினிடம் சமர்புரியும்படி கயிலாயம் நாடிவருவது.

ஜலந்திரன் - தரு.

சித்திரரதத்திலேரி மெத்தவேஉக்கிரமீரி
சிங்கம்போலேகெர்ச்சித்து சீரினேனே
சிவனைக்கொல்லவே மனந்தேரினேனே

பிருந்தைபுலம்பல்-தரு.

போர்புரியவேமன்னர்    தேரேறிபோனாரே
பிருதேவியெதிராந்தை    சேடிகளா
கூரியெண்ணெயென்று    நேரில்வணிகன்வாரான்
கொற்றவர்க்கென்னதிதோ    பாங்கிகளா

ஜலந்திரன்-தரு.

அண்டமூநடுங்கிடவே    கண்டவரொடுங்கிடவே
அதட்டிபுஜத்தைதகையால்    தட்டினேனே
பதஷ்டஅவுணர்களை    கூட்டினேனே

பிருந்தை-தரு

புலியும்நரிசெம்போத்து    போகுதேயிடமாக
புண்ணியர்க்குயென்ன    கேடுமோதான்
வலியன்கெருடன்கிரி    வலமாகவோடுதே
வருவாரோதிரும்பியும்    தாதிகளா

பொதுவசனம்.

இவ்விதமாக பிருந்தாவதி புலம்பிக்கொண்டிருக்கும்போது ஜலந்திராசூரன் கயிலாயத்தை நாடிவருவதை அறிந்த பரமசிவனானவர் விருத்தப் பிராமணவடிவமாய் ஜலந்திரன்முன் வருவது.

பரமசிவன்வருவது-கந்தார்த்தம்-கவி.

செங்கரத்தில்மான்மழுவுந் தரித்தயீசர்
சிரப்புடையகயிலைமலை தன்னைவிட்டு
அங்கமதில்திருநீறுங் காவிபூண்டு
அன்புடனேயமரர்களை காக்கவேண்டி
பொங்காவும்கங்கைநதி போக்கியேதான்
புகழ்பெருகும்தண்டு கமண்டலமுமேந்தி
சங்கரனும்விருத்தசன் யாசியைப்போல்
ஜலந்திரன்முன்கோலூன்றி வருகின்றாரே.

பரமசிவன்வருவது-தரு.

மான்மழுதரித்தயீசர்    மண்டலமெங்கும்பிரகாசர்
வானவர்புகழுந்திவ்ய    மோனவரிதோவந்தனர்
மெள்ளமெள்ளவேநடந்து    தள்ளாடிதள்ளாடிவீழ்ந்து
வெள்ளியங்கிரியைவிட்டு    வள்ளலுமிதோவந்தனர்
காதில்குண்டலம்பூண்டு    கைதனில்கெண்டியுங்கொண்டு
பாதக்குரடணிந்து    பரமனுமிதோவந்தனர்
காதகன்ஜலந்திரனை    வாதையுறவேமடிக்க
நீதில்லாகிழவன்போல்    ஜெகதீசனுமிகோலூன்றிவந்தார்

பொதுவசனம்.

இவ்விதமாக பரமசிவமானவர் விருத்தசன்யாசியாக கயிலாயத்தைவிட்டு வரும்போது ஜலந்திராசூரன் கயிலாயகிரியருகில்வந்துநின்று தன்மந்திரிமாரைப் பார்த்து யேதென்றுசொல்வது.

ஜலந்திரன்-கவி.

மதிமிகுமந்திரிமாரே மானகர்தன்னைவிட்டு
அதிவிரைவாகநாமும் அவுணர்களுடனேகூடி
பதியெலாங்கடந்துயிப்போ பாங்குடன்கயிலைவந்தோம்
சதியுளஅரனைமுன்பு ஜாடியேவாட்டுவோமே.

ஜலந்திரன்-வசனம்.

கேளும் மந்திரிமார்களா நாம் நமது பட்டணத்தைவிட்டு சேனை சைனியங்களோடு இந்தகயிலாயம் வந்து சேர்ந்தபடியால் தேவர்களுக்கு இடங்கொடுத்த பேயனாகிய சிவனை முன்னதாக அடித்து அதாகதம்செய்து இந்தகயிலையைவிட்டுதுரத்திவிட்டு மருபடி அந்ததேவேந்திரனைபின்கட்டாய்கட்டி நமதுபட்டணம் இழுத்துக்கொண்டு போவோம் வாரும் மந்திரிமார்களா.

மந்திரி-வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

ஈஸ்பரன் தரு-காவடிச்சிந்துவர்னமெட்டு.

ஆரப்பாநீயு மெந்தவூரு-நீயும்
அரியயுரைப்பா யுந்தன்பேரு
பாரப்பாயெந்தனுக்கு பட்சமுடனேயிப்போ
பகருநன்ருய் புகரு

ஜலந்திரன் தரு-ஷை-மெட்டு முடுக்கு.

எந்தன்பேர்ஜலந்திரா சூரனேநான்
இமையவரைவதைக்குந் தீரனே
சொந்தபட்டணத்திற்கும் அந்தப்பேரைவகித்தேன்
தொடுத்துகேளு மடுத்து

ஈஸ்பரன்-தரு-ஷை.

இங்குவந்தவிபாமேது அப்பா
எந்தன்மனதரிய வோது
அங்கத்தில்வேர்வைசிந்த யாரைநீதேடிவந்தாய்
அரிவிஎனக்கு தெரிவி

ஜலந்திரன்-தரு-கெடி.

உம்பர்க்கிடந்தந்த ஆண்டியை-இப்போ
வொழித்திடவேனானும் வேண்டியே
தென்புடனேயிங்கு திரண்டசேனையோடு
தேடியேவந்தேன் நாடியே

ஈஸ்பரன்-கவி.

அண்டமனைதயழித்தளித்து அமைக்கவல்ல
அந்தனுடன்போர்புரிய வந்தேனென்றாய்
தெண்டிரைசூழுலகமதில் சிவனார்தன்னை
ஜெயித்தவர்களெவரேனு முண்டோசொல்லு
கண்டபடியவரையும்நீ யுரைத்தாயானல்
கண்டிப்பாய்காலன்பதி சேருவாய்நீ
கொண்டதொருயெண்ணமதை போக்கியேதான்
கூட்டமுடன்பதிசென்று வாழ்குவாயே.

ஈஸ்பரன்-வசனம்.

கேளும் ஜலந்திராசூரனே இந்த அண்டசராசரத்திலுள்ள சகல ஆன்மாவையும் சிருஷ்டித்து ரட்சித்து பட்சிக்கவல்ல ஜெகதீஸ்பரனை எதிர்த்தவர்யாரும் மீளவில்லை நீஅவரையெதிர்த்தால் கண்டிப்பாய்க் காலன்பதி சேருவதுநிச்சயம் ஆகையால் நீஉன் கூட்டத்துடன் உன் பட்டணஞ்சென்று சுகமாய் வாழ்ந்திரும் ஜலந்திராசூரனே.

ஜலந்திரன்-தரு.

மண்ணையளந்தோதாரு கண்ணனும்போர்புரியாமல்
மயங்கியேமனங் தியங்கியே
குண்ணியவனுமப்போ நண்ணியெந்தனுடனே
கூடினன்யெனை கொண்டாடினன்

சு-கூற்றுவன்பதி யேற்றுவானென்றாய்
காற்றிலேப்பவே தூற்றுவேன்நன்றாய்

ஈஸ்பரன்-தரு.

கேசவனென்றுமேநீயு மீசனைபுகினேந்தாயோ
கெடுவாயேகெட்டு மடிவாயே
தாசனுகநீயிருந்தால் மோசம்வராதுந்தனுக்கு
தாளுவாய்பதி மீளுவாய்

சு-தாக்கியேவுயிர் போக்குறேனுனை
மார்க்கமாகவே மூர்க்கனேநினை





ஜலந்திரன் - தரு.

கம்பிவிகிழப்பயலே யிப்பொழுதேதவன்சிரசை
தரிப்பேனேயுயிர் பிரிப்பேனே
செப்பியபரமன் தன்னை சொர்ப்பமாகவேஜெயிக்க
தீரனென்ன ஆரனென்
ச-சொல்லுவாயேநீ தொல்லைநேருமே
சொல்லுமுன்னமே எல்லைசேருமே

சம்பரன் - தரு.

அத்தனைநீவெல்லுவது யிந்தருணமுண்மையாகில்
அறிவிப்பேன்ஒன்று தெரிவிப்பேன்
மெத்தவேநான்காண்பிப்பதை வெத்தியா தூக்கிசிரமேல்
வைப்பாயாஏலாமல் விர்ப்பாயா
ச-மிஞ்சிடாமன தஞ்சிசொல்லுவாய்
பஞ்சையாகில்நீ கெஞ்சிசெல்லுவாய்

ஜலந்திரன்-கந்தார்த்தம்-கவி.

கொக்கெனவேதலைநரைத்து கோலையூன்றி
கூன்வளைந்துயெதிர்நிற்குங் குருடனேகேள்
இக்கணமேஅஷ்டகிரி பர்வதத்தை
யெடுத்துமேபந்துபோ லடிப்பதல்லால்

திக்கெனவேயெழுகடல்நீர் வற்றவேதான்
திரட்டியேஜலபானஞ் செய்வதோடு
பக்கெனவேஅண்டசரா சரத்தையெல்லாம்

தரு.

பாரடா தூக்கியெரிவேனே எனக்குநிகரே
யாருமில்லையென் றறிவேனே
சூரியவுன்னெண்ணமதை சரியாமுதல்முடிப்பேன்
மீரியேசிவனைபின்னால் சீரியேசூக்ஷணமடிப்பேன்

ஈஸ்பரன்-கவி.

திட்டமாய்சிவனைநீயும் ஜெயிப்பதுவுண்மையாகில்
வட்டமாய்பாதந்தன்னால் வரிகின்றேன நனையிப்போ
சட்டமாய்பூமியோடு தான்பேர்த்துதலைமேல்வைத்தால்
அஷ்டதிக்குள்ளோர்போற்றும் அரனைநீஜெயிப்பாய்தானே.

ஈஸ்பரன்-வசனம்.

ஆனால் கேளும் ஜலந்திராசூரனே நீ அந்தபரமசிவத்தை ஜெயிப்பது உண்மையாகில் இதோநான் என்கால் பெருவிரலால் பூமியில் சக்கரம்போல் வருகினேன் அதை பூமியோடுபேர்த்து உன் தலைமேல் வைத்துக்கொண்டால் நீ அந்தபரமசிவத்தை வெல்லுவாய் உன்னாலதைத் தூக்கமுடியாதபட்சத்தில் அவரை ஜெயிக்க உன்னாலாகாது ஆகையால் இதோ நான்வருகியிருப்பதை பேர்த்தெடு பார்க்கலாம் சூரனே.

ஜலந்திரன்-கவி.

உஷ்ணமுள்வடவைதனை குளிரச்செய்தேன்
உதித்துவருங்கதிர்மதியை யுரங்கச்செய்தேன்
அஷ்டதிசையுள்ளவரைக் கலங்கச்செய்தேன்
அமரர்களைபுரமுதுகிட் டோடச்செய்தேன்
இஷ்டமுளதிருமாலை வாடச்செய்தேன்
யெங்குகிரைகெங்கைதனை குளமாய்செய்தேன்
கஷ்டமெனயிதைதூக்க நினைந்தாய்நீயும்

தரு.

காணவேயெடுத்தேன்பாருமே உந்தன்மனதா
நாணவேயெடுத்தேன் தேருமே
வேணவலுவுடனே விரும்பியுரைத்தவண்ணம்
ஆணவமாய்சிரசிலணிந்தேனிதோ பார்திண்ணம்

ஈஸ்பரன்சொல்-பொதுகவி.

தக்கதொருபுகழ்படைத்த ஜலந்திராசூரன்
    தன்சிரமேல்தூக்கியே வைத்தபோது
அக்கணமேஅதுதிகிரி யாகித்தானே
    அருத்திடவேயிருபிளவாய் அவனையப்போ
மிக்கதொருயீசனெற்றி நேத்திரத்தால்
    மேவியுடன்வந்தோரை யெரிக்கவேதான்
பக்கமுளதேவரெல்லாம் அவரைப்போற்றி
    பணிந்துமேதன் பதியை யடைந்திட்டாரே.

ஈஸ்பரன்-வசனம்.

இவ்விதமாக ஜலந்திராசூரன் ஈஸ்பரன்சொன்ன பிரகாரம் அவர் காலால்வரைந்த காட்டியதை தன் இருகரத்தாலும் பூமியோடு பேர்த்து அதிக பிரயாசையுடன் தூக்கி தன்சிரசின்மேல் வைத்தபோது அது கோடிகோடி சூரியப்பிரகாசம் பொருந்திய சக்கரமாகி அவனை இருபிளவாக்கி அந்த சக்கரமானது ஈஸ்பரன்கரத்திலமைய உடனே ஈஸ்பரன் அவன்குருதியையும் அவனுடன்வந்த சேனைகளையும் நெற்றிக்கண்ணாலெரிக்க அதையறிந்த தேவர்கள் ஈஸ்பரனைப் பணிந்து அவருக்கு ஜலந்திராவத மூர்த்தியென்று திருநாமங்கொடுத்து தங்கள்பதியடைய அந்தவிஷயங்களெல்லாம் அறிந்த விஷ்ணுவானவர் ஆதியிலிருந்துதான் ஜலந்திரன் பத்தினியான பிருந்தாவதியின்மீது கொண்டிருக்கும்காதலை தீர்த்துக்கொள்ள இதுவே சமயமென்று தன்ரூபத்தைமாற்றி கபடசன்னியாசியாக ஜலந்திராபுரி நாடிவருவது.

விஷ்ணுசன்னியாசியாகவருவது-கவி.

அண்டமதைதருஷ்டிதனி லடக்குநாதன்
    ஆண்மையுள்ளஜலந்திரன் றன்மனைவிமீது
கொண்டதொருபெண்ணமதை போக்கவேண்டி
    கோவிந்தன் தன்னுருவை மாத்தியப்போ
வண்டணியுங்குழலுடைய வஞ்சியான
    மாதுபிருந்தாவதியாள் நகரம்நாடி
தண்டுடனேகமண்டலமுங் கரத்திலேந்தி
    சன்னியாசிவுருவமதாய் வருகின்றாரே.

சன்னியாசி-வருவது-தரு.

மாயசன்யாசி
மானில்மோரடி
ஆயசன்யாசி
அகண்டபரிபூரண

உபாயசன்யாசி
யனந்தசன்யாசி
நேயசன்யாசி
ஞானசன்யாசி

அலைகடலில்பள்ளி கொண்டசன்யாசி
அண்டசராசர முண்டசன்யாசி
சிலையாய்பரமன்கையி லமர்ந்தசன்யாசி
செந்திருவைமார்பி லணிந்தசன்யாசி
அஷ்டாக்ஷரப்பொரு ளானசன்யாசி
அன்பாய்மணிபூரகத் தமர்ந்தசன்யாசி
துஷ்டர்தமையெல்லாம துலைக்குஞ்சன்யாசி
இஷ்டர்தன்னுள்ளத்தி லிருக்குஞ்சன்யாசி
தேவர்முனிவர்கள் புகழுஞ்சன்யாசி
திங்களணிந்தசிவன் மகிழுஞ்சன்யாசி
மேவியேவைகுந்தம் வாழுஞ்சன்யாசி
மிக்கஜலந்திரபுரி வந்தேன்சன்யாசி

சன்யாசி-வசனம்.

கேளும் துவாரபாலகரே நான் ஜலந்திராசுரன் மடிந்துவிட்டதை அறிந்து அவன்தேவியாகிய பிருந்தையின்பேரில் நெடுநாளாய் நான் காதலுற்றிருந்தபடியால் அதனை முடித்துக்கொள்ள இதுதான்சமயமென்று நான் கள்ளசன்னியாசியாக இந்தஜலந்திராபுரியில் அருகிலுள்ள நந்தவனம்வந்து சேர்ந்தபடியால் இதன் அழகைபார்த்து வருவோம் வாரும் துவாரபாலகரே.

சன்யாசிதரு-கருவிலுருவாகி என்றமெட்டு.

இந்தவொருநந்தவன சுந்திரப்பெருமைதனை
எந்தனாலுரைப்பதற்கு ஸ்திரமாமோ
சந்தனமும்பாரிஜாதம் கொந்தளிர்குருகுகோங்கு
விந்தையுள்ளசெந்தாமரை வெகுவாக
மல்லியுடன்முல்லைரோஜா நல்லநீலோர்ப்பலமும்
அல்லியுஞ்சாமந்திபு மழகாக
பன்னீருடன்மருவும் வுன்னிதமருக்கொழுந்தும்
என்னவிதமாயுரைப்பே னியல்பாக

பொதுவசனம்.

இவ்விதமாக விஷ்ணு நந்தவனத்தை சுற்றிப்பார்த்து மனமகிழ்ந்துக் குருந்தமரத்தடியில்வந்து உட்கார்ந்து யோகத்திலிருப்பவர்போலிருக்க அப்போது பிருந்தையானவள் தன்புருஷன்சமருக்குப்போனவர் வரவில்லையென்று மனக்கிலேசமடைந்து தனிமையாக நந்தவனம்வந்து புலம்புவது.

பிருந்தை-கவி.

என்னாள்செய்வேனையோ யீசனேகயிலைவாசா
மன்னவனெந்தன்வார்த்தை மறுத்துமேபரமர்மீதில்
உன்னியேசமருஞ்செய்ய வுரைத்துமேபோனநாதன்
இன்னமும்வரவுங்காணேன் யேந்திழையென்னசெய்வேன்.

பிருந்தை-புலம்பல்-தரு.

அய்யய்யோநான்யென்ன செய்வேனய்யோ
சிவனே செய்வேனய்யோ
அடியாள்மனங்கலங்கி அலையலானேன்
சுரு-அத்தனேபரி சுத்தனேயிப்போ
உத்தமிமனம் மெத்தவாடுதே அய்
அமர்புரியசொன்ன மன்னவா
யெந்தன் மன்னவரை
அடியாளினியுங்கண்ணில் காண்பேனோதான்
சுரு-அஞ்சினனுமே கெஞ்சிசொல்லியும்
மிஞ்சிசென்றனர் வஞ்சியென்செய்வேன் அய்
பயணமாகிமன்னர் போகையிலே
அவர் போகையிலே
பலவிததுர்க்குறிகள் நேர்ந்ததய்யோ
சுரு-பாசமானயென் னைசமன்னர்க்கு
மோசமென்னமோ யிசாயென்செய்வேன் அய்
கரந்தனிலேசூல மேந்துகின்ற
சிவனே யேந்துகின்ற
கங்கைபிரையணியும் கயிலைவாசா
சுரு-கன்னியாளிட மன்னரின்பிழை
வன்னியேந்திடும் முன்னவாபொரும் அய்

பொதுவசனம்.

இவ்விதமாக பிருந்தாவதி பிரலாபித்துக்கொண் டிருக்கும்போது கபடசன்னியாசியாகிய விஷ்ணு யேதென்று சொல்வது,

சன்னியாசி-கவி.

துடர்ந்துயென்னுடனேவந்த துவாரபாலகரேகேளீர்
கடந்துநீர்பிருந்தைபக்கல் கடும்புலிவடிவமாகி
மடந்தையாள்தன்னையிப்போ மருட்டியேநானிருக்கும்
விடந்தனையவளுஞ்சேர மெல்லியைதுரத்திவாரீர்.

ஷை வசனம்.

கேளும் துவாரபாலகரே நான்கொண்ட யெண்ணத்தை முடித்து கொள்ள இதுவே தக்கசமயமாதலால் அதோ கொஞ்சதூலவில் பிரலா பித்துக் கொண்டிருக்கும் பிருந்தாவதியிடம் நீங்களிருவரும் புலியாக உருவமெடுத்துசென்று அவளைபயமுறுத்தி அவள் நானிருக்கும் திசை யைநோக்கி வோடிவரும்படி துரத்திக்கொண்டு வாருங்கள் துவாரபால கரே.

து வசனம். அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

புலிகள்-வருவது-தரு.

அண்டம்நடுங்க புலிகளதிர
ஆக்கரித்தேபுலிகள் கொக்கரித்ததே
அரிவையாள் பிருந்தைதபக்கல்
அதும்பிவருகுதேபுலிகள் கதும்பிவருகுதே
கண்டபேர்கள் கலங்கிவோட
கதரிசீருதேபுலிகள் வுதரிசீருதே
கன்னியாள் பிருந்தைதன்னை
கண்டுபாயுதேவுக்கிரங் கொண்டுபாயுதே

பிருந்தை-தரு.

அய்யய்யோயென்மனம் நையுதே-இந்த
அரும்புலிகளென்மேல் பாயுதே
கையில்மழுமானேந்தும் கர்த்தனேவாருமே
தையலாளெந்தனை தற்காலங்காருமே

புலிகள்-தரு.

தண்டையிட்டு வாலைகுழைத்து
தாண்டியெகுருதேபிருந்தையை வேண்டியெகுருதே
தையலைவுடாம லப்போ
தாவிவருகுதேபுலிகள் மேவிவருகுதே

பிருந்தை-தரு

எங்குமொருவரைக் காணேனே-இப்போ
யேந்திழையாள் கண்ணில்தோணேனே
சங்கரர்போலொரு புங்கவரைக்கண்டேன்
அங்குசெல்லயிப்போ அரிவையாள்மனங்கொண்டேன்

புலிகள்-தரு.

கொண்டயெண்ணம் முடிக்கவேண்டி
குதித்துதுள்ளுதேபுலிகள் மதித்துதுள்ளுதே
கோதையை விடாமல்துரத்தி
கூடிவருகுதேஇரண்டும் வோடிவருகுதே

பிருந்தை-தரு.

கார்த்திடுங்கார்த்திடு மையனே-கயிலை
கர்த்தரையொத்திடுந் துய்யனே
பார்த்திடுமிப்புலி பதரியென்மேல்சீரி
பூர்த்தியாகக்கொல்ல பூவைதன்னைமீறி

சன்னியாசி-தரு.

ஆஹா புலிகளா நில்லுங்கள்-வுங்க
ளடவிக்கிநீங்களுஞ் செல்லுங்கள்
பாகார்மொழியுள்ள பாவையேகிட்டிவா
ஓஹோ அஞ்சவேண்டாம் வுத்தமியெட்டிவா

பிருந்தை-கவி.

என்னையாட்கொள்ளவேண்டி யென்குலகுருபோல்வந்த
உன்னிடபாதந்தன்னில் வுள்ளமுங்களித்துநன்ருய்
பன்னீராலடி துலக்கி பலவிதபுஷ்பஞ்சாற்றி
கன்னியாள்பணிந்தேனிப்போ கறங்கூப்பிஅடியாள்தானே.

ஷை வசனம்.

என்னுடைய அஞ்ஞானமாகிய இருளைப்போக்கி மெஞ்ஞானமாகிய பேரின்பத்தை யூட்டும்படியாய் என்முன்தோன்றி கடும்புலிகளினிடம் சிக்கியயென்னை தப்புவித்தகர்த்தனே அடியாள்தங்கள் பாதகமலங்களுக்கு பன்னீரால் பாதந்துலக்கி அநேகவிதமலரா லர்ச்சித்து கோடி கோடி நமஸ்காரம் செய்தேனையா சுவாமி.

சன்னியாசி-பிருந்தை-தர்க்கம்-தரு-காவடிச்சிந்து வர்னமெட்டு.

வாழிவாழிநீயும் வஞ்சியரேகிட்டி.
வாருமேமனந்தருமே உன்பேர்கூருமே-இப்போ
வாடிநந்தவனம் நாடிவந்தவிதம்
வழுத்துவாய்என்முன் நிகழ்த்துவாய்

பிருந்தை-தரு.

இந்நகருக்கு சொந்தமன்னரிட
தேவியான்பிராண ஆவியான் இங்குமேவியான்
நீசரிடஞ்சென்ற நேசனைதேடியே
வந்தேனேபுலியால் நொந்தேனே

சன்னியாசி-தரு.

கயிலைசென்ருனென்று பயிலவந்தாயின்று
கன்னியேஎந்தன்முன்னையே சொன்னுய்பன்னியே
கர்த்தரிடஞ்சென்ற வுற்றவிஷயத்தை
காட்டுவாய்மொழி யோட்டுவாய்

பிருந்தை-தரு.

அத்தனிடத்திலே யுத்தம்புரியசென்ரு
ராண்டவாகாவிபூண்டவா புகழ்கொண்டவா-அந்த
அய்யனிடஞ்சென்ற துய்யன்மீண்டுவர
காண்பேனேஇன்பம் பூண்பேனே

சன்னியாசி-பொதுகவி.

கன்னியாளுரைத்தபோது கபடசன்னியாசியாரும்
உன்னியேஞானத்தாலே வுணர்பவர்போலிருந்து
பன்னியகாவலற்கு பாங்குடனரிக்கைசெய்ய
முன்னேயேகொண்டுவந்து முகசுகுணம்வைத்ததப்போ.

ஷை-வசனம்.

இவ்விதமாக பிருந்தாவதி ஈசனிடம் சமருக்குச்சென்ற தன்நாயகன் இனிவருவாரோ வரமாட்டாரோ சொல்லுமென்று கேட்டபோது கபடசன்னியாசியானவர் ஞானதிருஷ்டியினுல் உணர்பவர்போல் சற்றுநேரம் தன்னிருநேத்திரங்களையும் சற்றுநேரம் மூடியிருந்து பிறகுமுன் புலியாக உருவங்கொண்ட துவாரகபாலகரிருவரும் இரண்டுகுரங்குகளாகி அருகிலிருக்க அவைகளைபகவான் கடைக்கண்ணுல்நோக்கஅதையரிந்தஇரண்டுகுரங்குகளும் ஒரேபாய்ச்சலாய் கைலாசம்சென்றுஇரண்டாய் பிளவுண்டு மாண்டுபோய்கிடக்கும் ஜலந்திரனுடலை தூக்கிவந்து பிருந்தை யெதிரில்வைக்க அதைக்கண்ட பிருந்தை புலம்புவது.

பிருந்தை-புலம்பல்-தரு-ஜம்பை.

என்னசெய்வேன்யேதுசெய்வேன்
என்னுடையபிராணபதி
கன்னியைதனியாய்விட்டு
கட்டழகாமடிந்தீரோதான்
ஈசனிடம்சமர்புரிய
யேகவேண்டாமென்றுரைத்தும்
பாசமுடன்சென்றதினுல்
மோசம்வந்துநேர்ந்ததையோ
மன்னவாவுனைப்பிரிந்து
மாங்கல்யமும்தானிழந்து
இன்னிலத்திலுயிரைவைத்து
இளங்கொடியாளிருப்பேனோதான்
மஞ்சளையும்நானிழந்து
மையிழந்துபொட்டிழந்து
வஞ்சியாளுமுயிரைவைத்து
வாழலாமோயிப்புவியில்

பிருந்தை-கவி.

வடிவுள்ளபிருந்தைமாது வாடியேசோக்கமாகி
இடிகேட்டநாகம்போலே யேங்கியேமனந்தளர்ந்து
துடித்துமேபுழுகைப்போலே துயரமாய்தலையின்மீது
அடித்துமேதரையில்வீழ்ந்து அலரியேமூர்ச்சையானாள்.

சன்னியாசி-கவி.

மங்கையாள்மூர்ச்சையாகி மானிலந்தன்னில்சாய
பொங்கமாய்மனங்களித்து பூரித்துமாயனப்போ
செங்கரந்தன்னுல்தொட்டு சேர்த்துமேஅணைத்துவாரி
பங்கமில்லாமல்தூக்கி பாவையின்சோகந்தீர்த்தார்.

# ஜலந்திராசூரசம்மார நாடகம்.

ஷை-வசனம்.

இவ்விதமாக ஜலந்திரன் உடல் யிருபிளவாக யிருக்கக்கண்ட பிருந்தை அநேகவிதமாய் புலம்பி மூர்ச்சையாகி பூமியில்விழுந்துவிட அப்போது கபடசன்னியாசியான மாயனானவர் பிருந்தையை இருகரத்தாலும் சேர்த்து வாரித்தூக்கி மார்போடணைத்து சையித்திய உபதேசஞ் செய்து மூர்ச்சைதெளிவிக்க அப்போதுபிருந்தை ஏதென்றுசொல்வது

பிருந்தை-கவி.

தன்னிகரிணையில்லாத தபரிஷியோரேகேளும்
கன்னியாளுயிரையிப்போ கார்த்திட்டவண்ணமாக
மன்னவருடலையொன்றாய் மாராமல்பொருந்தியெந்தன்
முன்னையேஎழுப்பித்தாரீர் முனிவரேபோற்றிபோற்றி.

பிருந்தை-வசனம்.

கருணம்கருணமையா சுவாமி முனிநாதரே அடியாளுக்கு உயிர்பிச்சை கொடுத்ததுபோல் இதோ யிருபிளவாய் மாண்டுபோய்கிடக்கும் என்மன்னவரின் உடலை ஒன்றாகபொருத்தி என்மன்னவரைஎழுப்பித்தாருமையா தபோதனரே.

சன்னியாசி தரு-மன்னுபுகழ்கௌசலை தன்-என்றமெட்டு.

| | |
|---|---|
| மின்னலொத்தமேனியுள்ள | மெல்லியேஎழுப்புமென்றாய் |
| இன்னிலத்தில்மாண்டவர்கள் | எவர்பிழைத்தார்கூறுநன்றாய் |

பிருந்தை-தரு.

| | |
|---|---|
| முத்திதருங்கலைகளெல்லாம் | பத்தியாயுணர்ந்தநாதா |
| இத்தருணங்கிருபைசெய்தேன் | உத்தமரைக்காரும்போதா |

சன்னியாசி-தரு.

| | |
|---|---|
| ஆண்டாண்டாயழுதாலும் | அரிவையரேகேளாயிப்போ |
| மாண்டாரெழுவாரென்று | மங்கையேபுல்வநுந்தப்போ |

பிருந்தை-தரு.

| | |
|---|---|
| தங்குபுகழ்கைலைமேவும் | தர்ப்பரர்க்கொப்பானதுய்யா |
| மங்கைமீதில்கிருபைசெய்தென் | மன்னன்பிச்சைதாருமையா |

சன்னியாசி-கவி.

இப்படிகூறக்கேட்டு யெம்பிரான்மனமகிழ்ந்து
ஒப்பிலாஜலந்திரன்தன் னுடலதையொன்றாய்சேர்த்து
தப்பியேதான்மறைந்து தன்ஜீவனதற்குள்போக்கி
செப்பியஜலந்திரனாக சீக்கிரமெழுந்திட்டாரே.

# ஜலந்திராசூரசம்மார நாடகம்.

சன்னியாசி-வசனம்.

இவ்விதமாக பிருந்தாவதி அனேகவிதமாய்வணங்கி கேட்டுக்
ள்ள அப்போது மாயனானவர் இருபிளவாயிருக்கும் ஜலந்திரன் உட
யும் ஒன்றாய்சேர்த்து தான்மாய்கையாய்மறைந்து தன்னுடையஆன்
வை ஜலந்திரன் உடலில்செலுத்தி ஜலந்திராசூரனாக யெழுந்திருக்கவு
னே பிருந்தாவதி சொல்வது.

பிருந்தை-தரு.

மன்னாஉனைக்காணாமல்இன்னாள் மனங்கலங்கினேனே நாதா நானே
கன்னியுளம்பூரித்துவுன்னிருபாதம் பணிந்தேனே எந்தன்கோனே

விஷ்ணு-தரு.

மானேமரகதமேமயிலேஇளங்குயிலே வாராய்முத்தந்தாராய்
தேனேதிரவியமேதெவிட்டாதமுக்கனி யென்தேவிபிராண ஆவி

பிருந்தை-தரு.

மாராவடிவுடையதீராயிருவர்களுங் கூடிமனைநாடி
நேராசெல்லுவோமிப்போசீராயெந்தனுடனே வாரும்மன்னாநீரும்

விஷ்ணு-தரு.

தாமதமின்றியிப்போதையலேவந்தோமடி தானேசெழுந்தேனே
காமன்கணையினாலேகளையாய்வருகுதடி கண்ணேஎந்தன்பெண்ணே

பிருந்தை-கவி.

வஞ்சியாள்யானிருக்க வரதையுமடைவிதென்ன
பஞ்சணைமீதுசென்று பலவிதலீலைசெய்து
கொஞ்சியேயிருவருந்தான் கூடியேசுகித்துநாமும்
நெஞ்சமுமகிழ்ந்துவாழ்வோம் நேசரேவருகுவீரே.

பிருந்தை-வசனம்;

கேளும் பிராணநாயகா அடியாளிருக்கும்போது தாங்கள் காமப் பசியினால் களைத்து வாடவேண்டிய காரணமென்ன நாமிருவரும் பஞ்சணைசென்று தங்கள் இஷ்டப்படி பலவிதலீலா விநோதங்களைப் புரிந்து சுகமாக வீற்றிருப்போம் வாரும் பிராணபதி.

பொதுவசனம்.

இவ்விதமாக ஜலந்திரனாக இருக்கும் மகாவிஷ்ணுவும்பிருந்தையும் அளவற்றகாலம் லீலாவிநோதமாய் சுகபோகங்களை அனுபவித்துவரும் போது ஓர்நாள் விஷ்ணுவானவர் அயர்ந்து நித்திரைசெய்துவிட அப்போது பரமசிவன் கட்டளைப்படி பிருந்தைகண்ணில் மகாவிஷ்ணுவின் சுயரூபந்தோன்ற அதைக்கண்ட பிருந்தாவதி மனங்கலங்கி ஏதென்று சொல்வது.

# ஜலந்திராசுரசம்மாரநாடகம்.

பிருந்தை-கவி.

ஐயய்யோஎன்னசெய்வேன் அரகராகயிலைவாசா
வையகமளந்தமாயன் வஞ்சித்துயென்னிடத்தில்
சையோகமாயிருந்து தையலைகர்ப்பழித்தான்
செய்வகையரிந்திடாமல் சிவசிவாகலங்கலானேன்.

ஷ-தரு-புலம்பல்.

வடிவேலாசிவன்பாலனே என்றமெட்டு.

என்ஆசைகணவனென்று மோசம்போனேன்
மோசம்போனேன்பின்னால் நேசமானேன்
என்நேசமராந்துமன்னன் மாண்டாரோ
மாண்டாரோஎன்னை வேண்டாரோ
படுபாவிசன்யாசி யாகிவந்தானடி
வந்தானடிமொழி தந்தானடி
கொடுந்துரோகியென்மீதி லாசைகொள்ளலாமா
கொள்ளலாமாமொழி விள்ளப்போமா
என்நாதனைப்போலேவந்து சேர்ந்தானடி
சேர்ந்தானடிமோகம் தீர்ந்தானடி
பொல்லாபாதகியென்றுலகோர் பேசுவாரே
பேசுவாரேஎன்னை யேசுவாரே
இனிநானேவுயிரைவைத்து யிருக்கேனடி
யிருக்கேனடிமனம் பொருக்கேனடி
கனிவாகநெருப்பில்வீழ்ந்து யிறப்பேனடி
இறப்போனடிவாழ்வை மறப்பேனடி

பிருந்தைகந்தார்த்தம்-கவி.

இருமையுள்ளமாயவனே யெந்தன்கர்ப்புக்
கீனமாயழித்த சண்டாளதுரோகி
நீபெருமையுள்ளயிச்சென்மம் நீங்கிபின்னால்
பேதையுள்ளமானிடனாய்ப் பிறந்துமேதான்
அருமையுந்தன்தேவிதன்னைப் புலியாய்வந்தோர்
அறக்கராய்பிறந்து அவரெடுக்கநீயும்
திறமையுள்ளவானரங்க ளோடுகூடி

த ரு.

திரியவேசாபமீந்தேனே அடியாள்மன
மரியவேசாபந் தந்தேனே
தெரியவுலகிலுள்ளோர் தீயையுடனேமூட்டி
உரியவாழ்வையும்விட்டு வுடனேவிழுந்தேன்செட்டி

பொதுவசனம்.

இவ்விதமாக பிருந்தையானவள் ஜலந்திரனாக வந்திருந்தவர் மாயனென்றறிந்து நடந்தவிஷயங்களை தன்னறிவாலுணர்ந்து கோபங்கொண்டு புலியாகவும் குரங்காகவும்வந்த துவார்பாலக ரிருவரும் அவருக்கெதிரிகளாய் அசுரர்களாய் பிறக்கவும் விஷ்ணுவை பூமியில் அரசன் குலத்தில் பிறந்து தன்னைவஞ்சித்ததுபோல் அவர்மனைவியை புலியாய் வந்த அசுரர் எடுத்துப்போகவும் அவர் குரங்கினங்களோடு கூடி வனங்களிலலையவும் சாபங்கொடுத்து பிருந்தை அக்கினியைவளர்த்தி அதில் வீழ்ந்து இறந்துவிட அப்போது விஷ்ணுபுலம்புவது.

விஷ்ணு-கவி.

கூடியேசுகித்திருந்த கோதையாள்மடிந்தபோது
நாடியேமனங்கலங்கி நங்கையாள்பிருந்தைதன்னை
தேடியேவெறிபிடித்து தியங்கியேசுடலைதன்னில்
வாடியேபுரண்டலைந்து வள்ளலும்புலம்புவாரே.

ஷெ-தரு-ஜம்பை.

கண்மணியேபிருந்தாவதி காமகளஞ்சியமே
பெண்மயிலேவுன்னையானும் பிரியமுடன்காண்பதெப்போ
பித்துவெறிபிடித்ததடி பேதையரேவுன்னினைவால்
உத்தமியேயெந்தனிட உடைகளையும்கிழித்தனடி
எங்கெங்குமுன்னைதேடி யேந்திழையைகாணமலே
தங்கிஇந்தசுடலை தன்னில் தான்புரண்டு அலையுரண்டி
மேனியெல்லாம்சாம்பல்பூசி மெல்லியரேதிரேகம்வாடி
வூனருந்தும்பேய்களுடன் வுழன்றலையவிதிவசமோ
பூதபிசாசுகளா பிணந்தின்னும்பட்சிகளா
காதலியாள்பிருந்தையரை கண்டிருந்தால்சொல்லுவீரே

பொதுவசனம்.

இவ்விதமாக மகாவிஷ்ணுவானவர் பிருந்தைமீதில் யேக்கமாய் வெறிகொண்டு பிருந்தை தகனமான சுடலையில்புரண்டுதிரேகமெல்லாம் சாம்பலைபூசி அலையும்போது இந்த விஷயமெல்லாம் அறிந்த பிர்மாவானவர் மகாலட்சுமியிடம் சொல்லும்படியாய் வைகுந்தம்நாடி வருவது.

பிர்மாவருவது-கவி.

தந்தையவர் திருமாலும்பிருந்தாவின்மேல்
தாளாத்மோகமதாலலையும்போது
சுந்திரஞ்சேரச்சேதி தனையறிந்து
சுருதிமறை தனையுணர்ந்த பிர்மதேவன்
விந்தையுடனன்னமதி லேறிக்கொண்டு
விரைவாகவைகுந்தந் தன்னைநாடி
குந்தமில்லா தாயாரைக் காணவேண்டி
குவலயந்தோர்புகழ்ந்திடவே வருகின்றாரே.

## பிர்மாவருவது-தரு.

ஆதிவைகுந்தவாசன் — நீதியாயளித்தநேசன்
அயன்பிர்மதேவன்வந்தாரே — அன்னத்திலேரி
அயன்பிர்ம — தேவன்வந்தாரே
பாதிமதியணிந்த — பரமன்தனை துதித்து
பைங்கொடிமார்மலர் — தூற்றவேயிருபுரமும்
அங்கஜனுங்கண்டு — போற்றவே
அகிலபுவனமெங்கும் — அனைத்தும்சிருஷ்டிசெய்யும்
பகவனுமினன்றுகூறவே — பக்தர்களெல்லாம்
பட்சமாய் — மனதுதேரவே
அன்னையிடத்தில்செல்ல — தன்னந்தனியதாக
உன்னிதமுடனேவாரேனே — அதிவேகமாய்
உத்தமியை — காணபோரேனே

## பொதுவசனம்.

இவ்விதமாக பிர்மாவானவர் மகாலட்சுமியை காணும்படி வைகுந்தம் நாடிவரும்போது மகாலட்சுமி சபாவாக வருவது.

## லட்சுமிவருவது-கவி.

பங்கையன்வருகுஞ்சேதி பாங்குடனரியவேண்டி
இங்கிதபணிகள்பூண்டு யெவர்களுமதிசயிக்க
கங்கணகடகமின்ன கதிரொளிபதக்கந்துன்ன
மங்கைலட்சுமியாளென்னும் மாதிதோவருகின்றாளே.

## லட்சுமிவருவது-தரு.

பேதைதமதிவதனி — சோதிவடிவுடைய
ஆதிலட்சுமியென்னும் — அம்மனும்வாராள்
கொண்டைகொப்பிகளாட — வண்டுகிதங்கள்பாட
தண்டைவெண்டயங்கொஞ்ச — தையலும்வாராள்
முத்துசரங்கள்மின்ன — ரத்தினபதக்கந்துன்ன
எத்திசையோர்போற்றுகின்ற — உத்தமிவாராள்
தேவர்முனிவர்போற்றும் — திசைமுகன்வருகுஞ்சேதி
மேவியரியவேண்டி — மெல்லியும்வாராள்

## பிர்மா-லட்சுமி-தர்க்கம்-தரு.

பிர்-சொந்தயென்னன்னையே — சுதனும்பணிந்தேனுன்னையே
லட்-எந்தனிடபாலனே — யென்றும்வாழிசீலனே
பிர்-வந்தேனுன்னைதேடியே — சிந்தைமெத்தவாடியே
லட்-மைந்தனேநீவுள்ளதை — மனமகிழ்ந்துவிள்ளதை
பிர்-தந்தையெவரிகொண்டனர் — தரணிவாழ்வைவிண்டனர்
லட்-விந்தையென்னசொல்லுவாய் — விபரமாகவிள்ளுவாய்
பிர்-பிருந்தைமீதிலேக்கமாய் — பிந்துகொண்டார்சோக்கமாய்
லட்-அந்தவிதங்கூருமே — அரிவையர்க்குநீருமே

59

பிர்மா-கவி.

அஷ்டஅபிஸ்வரியந்தன்னை அன்புடனளிக்கவல்ல
இஷ்டயென்னன்னையாரே யென்னிடதந்தையாரும்
துஷ்டனாஞ்ஜலந்திரன்தன் தோகையாள்மோகத்தாலே
கஷ்டமாய்வெறிகொண்டுமே காட்டினிலலைகின்றாரே.

ஸ்ரீ-வசனம்.

கேளும் அன்னையே யென்தந்தையாகிய திருமாலானவர் ஜலந்திரன் தேவியான பிருந்தையின்பேரில் கொண்டிருந்த காதல்தணியாமல் பித்துகொண்டு அவள் தகனமான மயானத்தில் புரண்டலைந்து திரிகின்றாரம்மா அன்னையே.

லட்சுமிபுலம்பல்-தரு.

அய்யோநானென்ன — செய்வேன்-எந்தன்
ஆண்டவாமனது — உய்வேன்
சுரு-வையகந்தனை — மெய்யாயுண்டவா
துய்யகோதண்டந் — கையில்கொண்டவா அய்

என்னை தனியாய் — விட்டு-பிருந்தை
கன்னிமையலால் — கெட்டு
சுரு-உன்னியவளைநீர் — யெண்ணியலைந்திட
நண்ணிசுடலையில் — குண்ணிகலிந்திட அய்

ஸ்ரீ-கவி.

அத்தனேகயிலைவாழும் அரகரா அரவம்பூண்ட
கர்த்தனேயெனது அண்ணா கன்னியை தனியாய்விட்டுன்
மைத்துனர்பித்துகொண்டு மயானத்திலலையநானும்
பத்தினிவுயிரைவைத்து பார்தனிலிருக்கலாமோ.

ஸ்ரீ-வசனம்.

ஓம்அரகரா மகாதேவா சம்போசங்கரா மான்மழுசூல கபாலபாணியாகிய யெனது அண்ணா தங்கள்மைத்துனராகிய என்மணவாளருக்கு யிப்பேர்க்கொற்ற கெடுதிநேர்ந்ததே இதற்கு யென்னசெய்வேன் ஜெகதீசா.

பிர்மா-கவி.

வாடியேகலங்கவேண்டாம் மாதாவேயெந்தன்தாயே
தேடியேகயிலைநாழும் தீவிரஞ்சென்றுயிப்போ
நாடியேவுமையாளுக்கு நடந்ததைவுரைத்தோமானால்
கூடியசீக்கிரத்தில் குறையதுதீருந்தானே.

ஷை-வசனம்.

ஆனால் கேளும் அன்னையே நீயாதொன்றுக்கும் சஞ்சலப் படவேண்டாம் நாமிருவரும் கைலாசஞ்சென்று உமாபார்வதியிடம் தெரிவித்தால் அதற்குதகுந்த யேர்ப்பாடுசெய்து யென்தந்தைக்கி யேற்பட்டிருக்கும் வெரியை நிவர்த்திசெய்ய முடியுமாகையால் நாம் கைலாசஞ்செல்வோம் வாரும் அன்னையே.

லட்சுமிசொல்-வழிநடை-தரு.

ஆயனேயென்னன்புடைய சேயனே
ஆவலாக தாவிபோக
தாயனேவருவே னுன்பின்சேயனே

பிர்மா-தரு.

அன்னையேசெல்லுவேன் யானும்முன்னையே
அரியைகார்க்க வெரியைதீர்க்க
பின்னையேவருவாய் வழியுன்னியே

லட்சுமி-தரு.

பாலனேதுடர்ந்து வாரேன்சீலனே
பத்தினிவாடி மெத்தவேஓடி
லோலனேமுன்செல்வா யனுகூலனே
தேடியேவந்தோம் கயிலைநாடியே
தெரியசத்தி அரியநத்தி
வாடியேவுரைப்போம் நாமுங்கூடியே

பொது வசனம்.

இவ்விதமாக லக்ஷிமியும் பிர்மாவும் கயிலாயம்நாடி வரும்போது உமாபார்வதி சபாவாக வருவது.

பார்வதிவருவது-கவி.

ஓங்காரப்பொருளாகி வுவ்வுமாகி
உகந்தஅவ்வும் யவ்வாகிவவ்வுமாகி
போங்கானசிவ்வாகி மவ்வுமாகி
புகழ்பெருகும் நவ்வாகிமூலமாகி
ரீங்காரவோம்சவ்வும் கிலியுமாகி
நிறைந்தபரிபூரணியாய் நிகழ்ந்துவோங்கி
பாங்கானதத்துவமுங் கடந்துநின்ற
பராபரியாள்பார்வதியும் வருகின்றாளே.

பார்வதிவருவது-தரு.

ஆராதாரந்தனிலே அமைந்தபஞ்சாட்சரியாள்
அங்கையர்க்கண்ணம்மைவந்தாள் சர்வகாரணி
அங்கையர்க்கண்ணம்மை வாராள்
ஓராதரவுமின்றி உதித்தபராபரையாள்
சுரு-உம்பருமன்பரு மின்புருஞ்சுரூபி
வம்பரும்புன்பருந் துன்புருபரூபி ஆரா

உச்சியின்கீழேயானும் உதித்தேனேவாலையாக
மெச்சியேவாசிதன்னை மதித்தேனேமாலையாக
சுரு-மித்துருவாகிய உத்தமரறிவார்
சத்தியையுணர்ந்திடுஞ் சிந்தருந்தெரிவார் ஆரா

மூலசத்தியதாகி மூனேந்தாகின்றவோங்காரி
ஆலகாலத்தையுண்ட அரனார் தன்னிடபாரி
சுரு-அனிந்தினிகமலினி அருகினில்சூழ
இனிமையாமாதர்க ளிருபுரந்தாழ ஆரா

லட்சுமிசதுர்முகன் தட்சணம்வருஞ்சேதி
பட்சமுடனேசென்று இட்சணமரிவேன்நீதி
சுரு-பத்தரைகார்த்திடும் உத்தமிமாது
இத்தரையோர்புகழ் பத்தினிசாது ஆரா

லட்சுமிதரு-காணலங்காரம்-என்றமெட்டு.

மதனியேசருணம்மதிமுக வதனியேருணம்-எனது
மதனியேவுந்தனிருமலர்ப் பாதந்தன்னையேநான்
சதமெனவேபணிந்தேன் தர்க்காருந்தையலேதான் மத

பார்வதி-தரு.

கோகிலகுயிலே நாகரீகமாகியமயிலே-லக்ஷிமி
கோகிலமேமானேதேனே கோதையேநீயென்றும்வாழி
தேகியைப்போல்வந்ததென்ன தெரிவையரேநீநேழி கோ

பிர்மா-தரு.

ஆரணிப்பணிந்தேன்அகில காரணிப்பணிந்தேனேஅத்தையே
ஆரணியேஆராதார பூரணியேகைலைவாழும்
நீரணிந்தோன்தேவியான நாரணிவுன்பாதம்நன்றாய் ஆர

பார்வதி-தரு.

வாணியின்லோலாகோதண்ட பாணியின்பாலா-கமல
வாணிசரஸ்பதியாள் மகிழும்மணவாளனே
நாணிவந்தவிபரம் நவிலுங்குணவாளனே வாணி

பிர்மா-தரு.

கண்ணன்வெரியினால்வுனது அண்ணன்வெரியினால்மெலிந்து
கண்ணன்வுனதுஅண்ணன் நண்ணிசடலைதன்னில்
மண்ணில்புரண்டுமேதான் குண்ணியலைகின்றாரே கண்

பார்வதி-தரு.

ஆதிலக்ஷிமிவுள்ளதை வோதுலக்ஷிமி-எனக்குநீ
நீதிதவரியேதான் நிஷ்டூரமாய்வைதாயா
பாதிபிரையணிந்த பாமரைப்போல்செய்தாயா ஆதி

## லக்ஷுமி தரு-நொண்டிசிந்து.

மறைபுகழ்மகேஞன்மணியே எந்தன்
மதனியரேசந்திர வதனியரே
தரைபுகழ்ஜலந்திரனும் என்தமையனுல்
தானேமடிந்திருக்க வூனமாகவே
அவன்-மங்கையாள்பிருந்தைமீது உன்தமையனும்
மட்டடங்காமையல்கொண்டு கெட்டயெண்ணமாய்
பங்கமில்லாசன்னியாசிபோல் வுருவமாகி
பாவையாளிருக்குமிடந் தாவியேசென்று
காவலர்தன்னைமேவி கடும்புலியாய்
கன்னியைத்தாத்திவர வுன்னியுரைக்க
அங்கு-மேவியபுலியைக்கண்டு நடுக்கமுற்று
மெல்லியாளோடிவரவே நல்லமேதன்றுமே
ஆனந்தமிகவடைந்து புலிகளை
அருகில்வானரமாக இருக்கசொல்ல
மானந்தபிருந்தையருந் தன்னிட
மன்னவன்சென்றவிடியம் பன்னியேகேழ்க்க
அவர்-நேயமாய்வானரத்தை எச்சரிக்க
சிமிஷமிருவுடலுந் தாமிஷமின்றி
உபாயமாய்த்தூக்கிவந்து எதிரில்வைக்க
உத்தமியாளுயிர்பிச்சை மெத்தவேகேழ்க்க
நாயமாய்வுடலிரண்டும் பொருந்தவைத்து
நங்கையையணைத்தங்கு பொங்கமுடனே
மாயமாய்தான்மறைந்து மங்கையெதிர்
மன்னவன்ஜலந்திரன்போல் முன்னேவரவும்
கன்னியாள்கண்டவுடன் கவலைநீங்கி
கட்டியணைத்திருவருந் திட்டமுடனே
பன்னியமாளிசென்று சந்தோஷமாய்
பக்ஷமாய்கூடிசுகிக்க யிஷ்டம்பொருந்தி
ஒப்பில்லாவுன்தமையன் வுருவமது
உத்தமியாளோர்தினம் மெத்தவேகண்டு
தப்பில்லாசாபமீந்து அவள்மடிய
அந்த-தையலால்கொண்டவெறி செய்வகைதோணேன் தத்

### பார்வதி தரு-சென்றுகனிபரித்துக்கொண்டு-என்றமெண்டு.

மானேமாயவர் மனையாட்டி-நீயுந்
தானேமயங்காதே சீமாட்டி
எல்லாம்-நானேஅறிந்தேன் பெருமாட்டி
நங்கையரேகிட்டி யிங்குவாருமெட்டி-
இனி-நடக்கும்விதமுரைப்பேன் கெட்டி மானே

அருமையானவித்து வொன்று-இதோ
அன்பாய்வுண்டு செய்தேனின்று
இதை-பெருமையுடனே பெற்றுசென்று
பிரியமுட ஊன்று
பேதையைப்போல் தோன்றும்
பிசகில்லைசொல்வா யிதைக்கொண்டு அரு

பார்வதிவசனம்.

ஆனல் கேளும் மங்கைலக்ஷிமி நீ என்தமையனைப்பற்றி யாதொருவியாக்கூலமும் அடையவேண்டாம் இதோ நான் ஒருவிதை வுண்டுபண்ணிக்கொடுத்தேன் நீ இதைக்கொண்டுபோய் பிருந்தை தகனமான விடத்தில்வூன்றி ஜலம்வூற்றிவந்தால் இந்தவிதையானது முதலில் கருந்துளபமாய் முளைத்து அவர்கண்ணிற்கு பிருந்தையாக தோன்றி அவர் கட்டியணைந்து சோகந்தீருவார் அப்போது நீயும் சகலதேவர்களும்அந்தத்துளபத்தை பரித்தணிந்து தோத்திரஞ் செய்தீர்களானல் உங்கள் எதிரில் பிருந்தையாக தோன்றுவாள் அவளை என்தமையனுக்கு விவாகம்செய்து வையுங்கள் போய்வாரும் லக்ஷிமி.

லட்சுமி-பொதுகவி.

மெல்லியந்தபார்வதியு மளித்தவித்தை
மேன்மையுடன்லட்சுமியாள் கறத்தில்பெற்று
நல்லதென்றுபிருந்தையவள் தகனமான
நடுச்சுடலைதன்னிலதை நாட்டியேதான்
வல்லியெனுமலர்மங்கை ஜலத்தையூற்ற
வளப்பமுள்ளகருந்துளப மாய்முளைத்து
எல்லையுள்ளோர் தானறிய பிருந்தையாக
வெம்பெருமான்மனந்தபதி யேகினரே.

ஷை-வசனம்.

இவ்விதமாக ஈஸ்வரியாள் கொடுத்தவித்தை லட்சுமி பெற்றுக்கொண்டுவந்து பி[illegible] தகனமானவிடத்தில் வூன்றி ஜலத்தையூற்றிவரும் போது [illegible]ளபமாய் முளைத்து ஸ்ரீகண்ணபிரான் நேத்திர [illegible]ால் தோன்ற உடனே அவர்கட்டித் தழுவி [illegible] கண்ட சகல தேவர்களும் தாங்களும் அந்த [illegible]ண்ணபிரானை தோத்திரம் செய்யும்போது [illegible]ம்படியாய் பிருந்தையாக தோன்ற வுட [illegible]பிரானுக்கு பிருந்தையை திருமங்கில் [illegible]தி சென்றனர்.

இந்நாடகம்பாடி முடிந்தகாலமும் இயற்றியவர்பேரும்.

64

கவி.

விளங்குசலிஐயாயிரத் திருபத்தெட்டாக
  மேவிடும் பிரபவாண்டு
விருச்சிகமோரைந்து வெய்யவன்வாரத்தில்
  விதித்தநக்ஷத்திர மஸ்தம்
துலங்குதிதிப்பதினொன்றி லமிர்தயோகத்திலே
  துதிபெரும் பரமர்தன்னால்
துண்டன்ஜலந்திரன் மாண்டநாடகமதை
  துய்யசெந் தமிழினாலே
வளங்களுருகூடல்மா நகரமெனும்பதியதனில்
  வாசனும் மாசிலாத
வன்னியகுலத்தவன் சம்புமகாரிஷிகோத்ரன்
  வள்ளலைதினந் துதிப்போன்
களங்கமிலாவடியார்களன்பன்யேட்பாவாடை
  சரிப்சுதனு யுதித்தோன்
காசினியோரரியவே தாசன்வீராசாமி
  கழன்றனன் னுலகில்மாதோ.

முத்தியையளிக்கவல்ல மூவருந்தேவர்வாழி
எத்திசைதனில்வசித்தோ ரின்பமாய்கேட்டோர்வாழி
பத்தியாயச்சிட்டோரும் பாடவேகேட்டுக்கொண்ட
ரத்தினமுதலியாரும் மென்னுளும்வாழிவாழி.

வாழி வாழி வாழி வாழி.

ஜலந்திராசூர சம்மாரநாடகம்

முற்றிற்று.

—— 68